# மீரா

மொழி பெயர்ப்பு நூல்

உரிமை
பதிவு செய்யப்பட்டது

# மீரா

DR. T. P. M. LIBRARY,
MADURAI KAMARAJ UNIVERSITY.

அருள் நிலைய வெளியீடு

தமிழாக்கம், ப. கி. விஜயராகவன்

முதற் பதிப்பு : 1947 ஜுன்

விலை ரூபாய் ஒன்று

மதராஸ் ரிப்பன் பிரஸ், ராமச்சந்திரபுரம்.

# பதிப்புரை

**மீனு**—*குஜராத்தி—காளிதாஸ் மேகானி*
**வேடன் கடிதம்**—*குஜராத்தி—தூமகேது*
**சத்தியம் தேடியவன்**—*ஹிந்தி—சுதர்சன்*
**வியாபாரி**—*ஹிந்தி—ஜயசங்கர் பிரசாத்*
**கைதியின் கடிதம்**—*சரித்திரம்*

*—ப. கி. விஜயராகவன்*

என்ற கதைகள் 'மீனு' என்ற தொகுப்பின்கீழ் இந்தப் புத்தகத்தில் பிரசுரிக்கப் பட்டுள்ளது.

இவைகளைத் தமிழில் தந்த ஆசிரியர் **ப. கி. விஜயராகவன்** அவர்கள் ஏற்கனவேயே நூர்ஜஹான் என்ற நாடகத்தை மொழிபெயர்த்து தமிழுலகிற்குத் தந்துள்ளார். இந்த நாடகம் அகில இந்திய ரேடியோ நிலயத்தில் நடிக்கப்பட்டது நேயர்களுக்கு நினைவு இருக்கலாம். ஆசிரியர் அவர்கள் பத்திரிகை உலகிற்கு அநேக மொழிபெயர்ப்புக் கதைகளும், கற்பனைச் சித்திரங்களும் ஏற்கனவேயே தந்துள்ளார்.

முன்னுரை தந்து உதவிய அறிஞர் வெ. சாமிநாத சர்மா அவர்களுக்கு எங்கள் நன்றி.

ராமச்சந்திரபுரம்
1—6—47
க—சு—௪௭

**அருள் நிலயம்**

# முன்னுரை

இந்தச் சிறிய நூலிலுள்ள நான்கு சிறு கதைகளையும் ஒரு கடிதத்தையும் கவனத்துடன் படித்தேன். யாவும் உயர்ந்த கருத்துடையனவா யிருக்கின்றன வென்பதை ஆரம்பத்திலேயே சொல்லிவிட விரும்புகிறேன்.

காதல், வேற்றுமையிலே ஒற்றுமையைக் காண்பது; மௌனத்திலே இன்பம் நுகர்வது; தியாகத்திலே விகாச மடைவது. இத்தகைய காதலின் மகோன்னதத் தன்மை, நமக்கு 'மீனு' வின் மூலமாகவும் 'வியாபாரி' மூலமாகவும் சித்திரித்துக் காட்டப் படுகிறது.

வேடன் கடிதத்தில், வேடன், தன் வாழ் நாளின் முற்பகலில், எத்தனையோ பிராணிகளை, பிரிவினால் ஏற் படக்கூடிய அவஸ்தைகளுக்குட் படுத்தினான். அதற்குப் பிரதியாக தன்னுடைய வாழ்நாளின் பிற்பகலில், தானே, பிரிவினால் ஏற்படக்கூடிய அவஸ்தைகளை அனுபவித்து விட்டான். முற்பகல் செய்யின் பிற்பகல் விளையு மன்றோ? தவிர, இந்தக் கதையில் "மனிதன் சுயநலத்தை விட்டுப் பரோபகாரம் செய்ய ஆரம்பித்தால், பாதி உலகம் அமைதி யும் சாந்தியும் அடைந்து விடும்" என்ற வாசகம் காணப் படுகிறது. பாதி உலகமென்ன, முழு உலகமும் சாந்தி யடையும்.

'சத்தியம் தேடியவன்' என்ற கதை, படிப்பவர் மனத்தை அசைத்துக் கொடுக்கக் கூடியது. ஈசோபநிஷதத்தின் பதினைந்தாவது மந்திரத்திற்கு வியாக்கியானம் போலிருக்கிறது இந்தக் கதை. இதற்கு அதிகமாக வேறு ஒன்றும் இந்தக் கதையைப் பற்றி நான் சொல்ல விரும்பவில்லை. வாசகர்களைப் படிக்குமாறு வேண்டுகிறேன்.

'கைதியின் கடிதம்' சுதந்திர உணர்ச்சி யுள்ளவர்களின் உள்ளத்தைத் திறந்து காட்டுவதா யிருக்கிறது. சுதந்திர உணர்ச்சி யுள்ளவர்கள் சிங்கத்தின் வாலாக இருப்பதைக் காட்டிலும் ஈயின் தலையாக இருக்கவே விரும்புவார்கள்.

ஸ்ரீ ப. கி. விஜயராகவன் இந்தக் கதைகளை அழகான முறையில் தமிழர்களுக்குத் தந்திருக்கிறார். இவர் இது போல இன்னும் பல கதைகளை – உயர்ந்த கருத்துடைய கதைகளை — தமிழர்களுக்கு அளித்துக் கொண்டிருக்க வேண்டுமென்பது என் விருப்பம்.

சென்னை,
8-5-47.

LR. T. P. M. LIBRARY
MADURAI KAMARAJ

# பொருள் அடக்கம்

| | பக்கம் |
|---|---|
| மீனு (குஜராத்தி) <br> **—காளிதாஸ் மேகாணி** | ... 9 |
| வேடன் கடிதம் (குஜராத்தி) <br> **—தூமகேது** | ... 29 |
| சத்தியம் தேடியவன் (ஹிந்தி) <br> **—சுதர்சன்** | ... 45 |
| வியாபாரி (ஹிந்தி) <br> **—ஜயசங்கர் பிரசாத்** | ... 60 |
| கைதியின் கடிதம் <br> **—ப. கி. விஜயராகவன்** | ... 66 |

MADURAI KAMARAJ UNIVERSITY

# மீனு (குஜராத்தி)

காளிதாஸ் மேகாணி

சிந்து நதிக்கரைப் பசும்புல் வெளியில் சில எருமைகள் மேய்ந்து கொண்டிருந்தன. அந்த எருமைகளை மேய்க்கும் வாலிபன், ஒரு மரத்தடியின் நிழலில் உட்கார்ந்து குழலூதிக் கொண்டிருந்தான். அவனுடைய உண்மையான பெயர் சாகாட். ஆனால், கிராம ஜனங்களுக்கு அவன் எந்த ஊர், அவன் பெற்றோர் யார் என்ற ஒன்றும் தெரியாது. ஜனங்கள் அவனை மேஹார் என்றே அழைத்து வந்தார்கள். மேஹார் என்பதற்கு எருமைகளை மேய்ப்பவன் என்றுதான் பொருள். மேஹாரின் எஜமானுக்கு மீனு என்று ஒரு பெண் உண்டு. அவள் அவனை 'அநாதை' என்று பரிகசிப்பதுண்டு. மீனுவின் வாயிலிருந்து வெளி வரும் இந்தப் பரிகாச வார்த்தைகள், மேஹாருக்கு மிக்க இனிப்பாகவே யிருக்கும்.

மீனுவின் தந்தை தோலாஜி என்னும் வகுப்பைச் சேர்ந்த ஒரு குயவன்.

உச்சி வெயில் மண்டை வெடித்து விடும் போலிருந்தது. மேஹார் மரத்தடியின் நிழலில் உட்கார்ந்து குழலூதுவதில் முனைந்திருந்தான். கண்ணாடி போல் பள பளவென்று துலங்கிய ஒரு செம்பை அம்மானை ஆடிக்கொண்டே, மீனு அங்கே வந்து சேர்ந்தாள். 'மேஹார், மேஹார்' என்று அவள் அவனைச் சத்தமிட்டுக் கூப்பிட்டாள்.

சிறிது நேரம் வரையில் அவன் அசையவே யில்லை. குழலூதுவதில் மெய் மறந்து, தன்னுணர்ச்சி இழந்திருந்தான். மரக்கிளையிலிருந்து தொங்கிக்கொண்டிருந்த அவன் கால்களைப் பிடித்து மீனு உலுப்பினபோதுதான், மேஹாருக்குத் தன் உணர்ச்சி வந்தது.

" இப்போதாவது கீழே இறங்கி வருகிருயா, அல்லது காலைப் பிடித்துக் கீழே இழுத்துப் போடட்டுமா?" என்ருள் மீரு.

மேஹார் வெட்கமடைந்து, கீழே குதித்தான். அவன் பயந்தவனைப்போல் நடித்து, "அகாலத்தில் வந்து என் கோபித்துக் கொள்கிருய்? விஷயமென்ன?" என்று கேட்டான்.

" வீட்டுக்கு விருந்தாளிகள் வந்திருக்கிருர்கள். சீக்கிரமாக இரண்டு சேர் பால் கறந்து கொடு" என்ருள் மீரு.

" எருமைகள் என்னவோ வெகு தூரத்தில் இருக்கின்றனவே. நீ போய் அவைகளை ஓட்டிக்கொண்டு வா."

" நான் ஏன் போவேன்? படேலின் பெண் எருமைகளை ஓட்டுவாளா, என்ன? எதற்காக உன்னை அப்பா வேலைக்கு வைத்திருக்கிருர்? உன்னை சிம்மாசனத்தில் உட்காரவைத்துப் பூஜிப்பதற்கா? சீக்கிரம் போய் எருமைகளை ஓட்டி வா; இல்லா விட்டால் உன் இராச் சாப்பாட்டில் மண் விழுந்து விடும்."

மேஹார் நாலுபுறமும் தன் பார்வையைச் செலுத்தினுன்: ஆனல், எருமைகள் அவன் கண்களுக்குத் தென்படவில்லை. அவைகள் தான் புல் பூண்டுகளில் மறைந்து மேய்ந்து கொண்டிருக்கின்றனவே!

" சிட்டியடி. அவைகள் எங்கிருந்தாலும் வந்து சேர்ந்துவிடும்" என்று மீரு சொன்னுள்.

மேஹார் தலையைச் சொறிந்து கொண்டே, " சிட்டியடிக்க எனக்குத் தெரியாது" என்று சொன்னுன்.

" அட வெட்கம் கெட்டவனே! மாடு மேய்ப்பவனுயிருந்தும் சிட்டி யடிப்பதற்குத் தெரிய வில்லையே! நீ ஏன்

அந்த வேலையை ஒப்புக்கொண்டாய்? எங்கேயாவது ஆற்றிலே குளத்திலே விழுந்து சாகிறதுதானே!''

மீனு இரண்டு காதுகளையும் விரல்களால் பொத்திக் கொண்டு, ஒரு பெண் மயில் கூவுவதைப் போல், வெகு தூரம் கேட்கக்கூடியவாறு ஏதோ சப்தம் செய்தாள். நீண்டு அடர்ந்து வளர்ந்திருந்த புல் பூண்டுகளிடையே யிருந்து, சிறிது நேரத்தில் எருமைகள் அனைத்தும் கத்திக் கொண்டு ஓடிவந்து, அவளை நெருங்கிச் சூழ்ந்து கொண்டன.

''சரி, இப்போதாவது சீக்கிரம் பால் கறந்து கொடு'' என்றாள் மீனு.

மேஹார் வெட்கத்தோடு நின்றான்.

''நல்ல இடையன் நீ! உனக்குப் பால் கறக்கக்கூடத் தெரியவில்லையே! உன் வாழ்க்கையில் மண் விழ'' என்று மீனு கோபித்துக்கொண்டாள்.

மீனு தானாகவே பால் கறக்கலானாள். சிறிது நேரத் தில் பால் செம்பு நிரம்பிவிட்டது. ஊற்றுப்போல் நுரை பாத்திரத்திலிருந்து பொங்கியது.

''முட்டாள் மேஹார்! சிட்டி யடிக்கத் தெரியாதவனே! பால் கறக்கத் தெரியாதவனே!'' என்று சொல்லிவிட்டு, மீனு தலையில் பால் செம்பை வைத்துக்கொண்டு, கிராமத்தை நோக்கிப் பெருமிதமாக நடந்து சென்றாள். மீனுவின் புன்சிரிப்பையும் பெருமித நடையையும் கண்டு மேஹார் அப்படியே சித்திரம்போல் அசைவற்று நின்றான். மீனுவின் வசவு அவனுக்கு மிக்க இனிப்பா யிருந்தது. அவள் என்றைக்காவது அவனை வைதால் அன்று மேஹாரின் ஆனந்தத்துக்கு எல்லை கோல முடியாது. அவனது உள்ளம் பூரிப்படையும்!

மீரா மேஹாரிடம் எல்லையற்ற கருணை காட்டினாள். மேஹார் தன் வேலையில் அநேகம் தவறுகள் புரிவான். குயவன் தோலாஜி அதற்காக அவனைத் திட்டுவான்; கோபித்துக் கொள்வான். எஜமான் திட்டினால், மேஹாரின் மனது சங்கடப்படும். அவன் உற்சாகம் குன்றி விடுவான். அப்போது மீரா அவன் மீது அன்பு மழை சொரிவாள். அவனை உற்சாகப் படுத்த மறைமுகமாக முயற்சிப்பாள். மீராவின் முயற்சி அவளுடைய தந்தைக்குத் தெரியாமலில்லை; ஆனால், கருணையுள்ளம் படைத்த தன் பெண்ணின் மீது அவனுக்கு அபார நம்பிக்கை. நானூறு கழுதைகளும், பதினைந்து எருமைகளும் உடையவன் குயவன் தோலாஜி. செல்வமாக வளர்த்த தன் ஒரே பெண் ஒரு கிராமிய இடையனைக் காதலிப்பாள் என்று அவன் கனவிலும் ஒரு போதும் கருதவில்லை!

ஒரு நாள் சம்பவம்! மேஹார் சிந்து நதிக்கரையில் உட்கார்ந்திருந்தான். ஐந்து கழுதைகளை இழந்ததற்காகத் தோலாஜி அன்று அவனுடன் சண்டையிட்டான். அவனது அழகிய முகத்தில் வேதனை நிறைந்த சோக ரேகைகள் படர்ந்திருந்தன. மீராவின் காலடிச் சத்தம், அவனை விழிப்புறச் செய்து விட்டது. வந்தவுடன் மீரா பரிகாசம் நிறைந்த குரலில் சொன்னாள்: "இன்னும் உன் மூளைக்கு அது எட்ட வில்லையா! எங்கே அந்தக் கழுதைகள்!"

இதைக் கேட்டவுடன், மேஹாரின் கண்ணிலிருந்து பொல பொல என்று கண்ணீர் வடிய ஆரம்பித்தது. மீரா புரிந்து கொண்டாள். மாடு மேய்ப்பவன் இம்மாதிரி அழ மாட்டான். அவள் மேஹாரின் கைகளைப்பற்றி மதுரமான குரலில் சொன்னாள்: "அடே, மாடு மேய்ப்பவனாயிருந்தும், ஏன் அழுகிறாய்? மாடு மேய்ப்பவனுக்கு இவ்வளவு பச்சை உள்ளமா?"

"மீஞு! நான் உன்னை ஏமாற்றி விட்டேன். நான் ஒரு மாட்டிடையன் அல்ல!"

"என்ன! நீ மாடு மேய்ப்பவன் அல்லவா? அப்படி யானல், ஒரு ராஜகுமாரனே?"

"ராஜகுமாரன் அல்ல; ஆனல் ராஜகுமாரனைப் போல் செல்வமாய் வளர்ந்த ஒரு பிரபுவின் மகன்."

"யார் மகன்?"

"இதை யெல்லாம் தெரிந்து கொண்டு நீ என்ன செய்யப்போகிருய்?"

"என் மீது ஆணையாக இதை நீ சொல்லித்தான் தீர வேண்டும்! இவ்வளவு பெரிய ரகசியத்தை மறைத்து வைத்துக்கொண்டு என்ன செய்யப்போகிருய்?"

"நல்லது மீஞு! நான் சிந்து வாசியல்ல. புகாரா நாட்டு முஸ்லீம்; வெளித் தேசத்தவன். என் தந்தையின் பெயர் மிர்ஜா அலிபேக். அவர் பெரும் பணக்காரர். இப்போது அவருக்கு வயது எழுபத்தஞ்சு இருக்கலாம். அவரது முதுமைப் பருவத்தில் ஒரு முஸ்லீம் சித்தரின் ஆசீர்வாதத்தால் அவருக்கு நான் மகனுய்ப் பிறந்தேன். மீஞு நான் வெறும் மாட்டிடையன் அல்ல. நான் புகாராவி லுள்ள பெரிய பெரிய வித்வான்களிட மெல்லாம் கல்வி கற்றவன். இந்தியாவைப் பார்ப்பதற்காக, இங்கே வந்து சேர்ந்தேன். இரவு இங்குள்ள ஒரு சத்திரத்தில் தங்கினேன். உன் தந்தையிடம் மண் பாத்திரங்கள் வாங்க உன் வீட்டுக்கு வந்தபோது, உன்னைக் கண்டேன். கண்டதும் உன்னை மோகித்துப் பித்தனுகி விட்டேன். என் அருமை நண்பன் அசன் பேக் என்னை பலவாறு தேற்றினுன்; ஆனல் நான் ஆறுதலடைய வில்லை. என் ரத்தினங்கள் களவு போயின; என் ஐசுவரியம் கரைந்து விட்டது; என்

நண்பன் மறைந்து விட்டான்! காற்றுடன் பேசும் தன்மை பெற்ற என் ஒட்டகத்தையும் எவனே களவாடி விட்டான். நானே உன் காதலைப் பெற மோகங்கொண்டு, தன்னிலை அழிந்து, இன்று சிந்துவில் மாடு மேய்ப்பவனுக இருக்கிறேன். உன் தந்தையின் கழுதைகளை மேய்க்கிறேன்.

மீனு ஆச்சரியம் அடைந்தவளாய் பரிகாசக் குரலில், "எனக்கு இப்போதுதான் விஷயம் புரிந்தது! புகாராவின் ஐசுவரியத்தை அடைவதற்காகவும், சகோதரர்களின் அன்பைப் பெறுவதற்காகவும், நீ ஆனந்தமாக இதை விட்டுச் செல்லலாம். கூட்டின் கதவை நான் திறந்து விடுகிறேன்" என்று சொன்னுள்.

"முடியாது. இப்போது நான் எங்கே செல்வேன்? கூட்டில் அடைபட்டிருந்த பறவையைக் காட்டுப் பறவைகள் அங்கீகரிக்க மாட்டா. சிந்துவின் கரையோரத்தில் தான் எனக்குச் சமாதி."

"அப்படியானல் யாருக்காகக் கண்ணீர் வடிக்கிருய்?"

"என்னைக் கேவலம் ஓர் இடையனுக எண்ணும் மீனுவுக்காக."

மீனுவும் மேஹாரைத் தன் கணவனுக மனதிலே வரித்து விட்டாள்.

## 2

சிந்து நதிக்கரையில், பரந்த ஆலமரத்தடியில், ஒவ்வொரு நாளும் உச்சி வேளையில், மீனுவும் மேஹாரும் சந்திப்பது வழக்கமாகி விட்டது. இந்த விஷயம் எப்படியோ தோலாஜியின் காதுக்கு எட்டிவிட்டது. அவர்கள் இப்போது நடுப்பகலில் சந்திப்பதற்குப் பதிலாக, நள்ளிரவில் சந்தித்து, கிசு கிசு என்று காதல் கதைகள் பேசுவது அந்த

ஆலமரத்துக் கிளைகளில் படுத்திருக்கும் பட்சிகளுக்குக் கூடக் கேட்காது; ஆனால், எப்படியோ தோலாஜியின் காதுக்கு அத்தனையும் எட்டிவிட்டது.

தோலாஜி மறு நாள் காலையில் மேஹாரிடமிருந்து கோலைப் பிடுங்கிக்கொண்டு, "இனிமேல் நீ இந்தச் சதா புரத்தின் எல்லையில் கால் வைத்தாயானால், உன்னை வெட்டிக் கொன்று உன் ரத்தத்தால் மீனுவுக்கு ஸ்னானம் செய்விப் பேன் என்பது உன் ஞாபகத்திலிருக்கட்டும்" என்று எச் சரித்து, "நன்றிகெட்டவனே! இங்கிருந்து வெளியேறு" என்று உறுமினான். மேஹாரும் அகன்றான்.

சிந்துவின் மறுகரையில் மேஹார் தனக்கென்று ஒரு குடிசையை அமைத்துக் கொண்டான். அங்கே அவன் காதல் வெள்ளத்தில் மூழ்கிப் பிரக்ஞையற்றவனாகி ஊண் உண்டிகளையும் பல சமயம் மறந்துவிடுவான். காலையி லிருந்து மாலைவரையில் ஈரானி, அரபி, சிந்து பாஷைக் கவிதைகளைப் பாடுவதிலும் குழலூதுவதிலுமே நேரத்தைப் போக்குவான். இரவு சமீபித்ததும், மீன்கறி சமைப்பான். சமைத்த மீனை நள்ளிரவில் தலைமீது சுமந்து, சிந்து நதியில் குதிப்பான். யானைகளையும் அடித்துச் செல்லக்கூடிய அந்த நதியின் பிரவாகத்தில் வலிமை பொருந்திய தன் கைகளால் தண்ணீரைக் கிழித்துக் கொண்டு, பிரமாண்டமான ஒரு முதலையைப் போல் பயமில்லாமல் நீந்திச் செல்வான். கன்னங்கரிய இருளில் கண்மூடிக் கண் திறப்பதற்குள், சிந்து நதியின் ஒரு மைல் அகலத்தையும் கடந்து அக் கரையைமேஹார் வந்தடைந்ததும், மீனுவின் கோமளமான இரு கைகளும் அவனை வரவேற்றுத் தண்ணீரிலிருந்து அவனை வெளியேற்றிவிடும். மறுபடியும் அவ்விருவரும் அதே ஆலமரத்தினடியில் அமர்ந்து, மீன் விருந்துண்டு, காதல் பேச்சிலே இரவின் ஒரு ஜாமத்தைக் கழித்து விடு

வார்கள். மேஹார் மறுபடியும் சிந்து நதியைக் கிழித்துச் சென்று, மறு கரையிலிருக்கும் தன் குடிசைக்குப் போய்ச் சேர்வான்.

இம்மாதிரியாக அனேகம் இரவுகள் கழிந்தன. சிந்து நதியில் உண்டாகும் பயங்கரமான சூறைக்காற்று கூட மேஹார் இக் கரைக்கு வருவதைத் தடுக்கமுடியாது.

ஒரு நாள் பூர்ணச் சந்திரனின் நிலவொளியில் அவன் சமைத்துக் கொண்டு வந்த மீனின் ருசியை அளவிட்டுச் சொல்லமுடியவில்லை. ஒவ்வொரு கவளத்தையும் விழுங்கி விட்டு, அதைத் தெவிட்டாது புகழ்ந்தாள்: "மேஹார்! இன்று இந்த மீன் எவ்வளவு ருசியா யிருக்கிறது! தினந் தோறும் ஏன் இவ்வளவு ருசியுள்ள வஸ்துவை நீ கொண்டு வரக் கூடாது?"

மேஹார் சிரித்தான்: "தினந்தோறும் கொண்டு வர லாம், மீனு! ஆனல், இந்த மீனைச் சமைத்தவன், சில தினங் களுக்குப் பிறகு உயிரோடிருக்க முடியாது."

அப்போது மேஹாரின் முகத்தில் ஏதோ வேதனையின் அறிகுறி தென்பட்டது. அவன் அந்த வேதனையை அடக்கி வைத்துக் கொள்வதற்காகச் செய்த முயற்சிகளை மீனு சட் டென்று ஊகித்து விட்டாள். "ஏன் இன்று இவ்வளவு வியாகூலமா யிருக்கிறாய்?" என்று கேட்டாள்.

"வியாகூலமா? அப்படி ஒன்றும் இல்லையே."

சிறிது நேரத்தில் மீனுவுக்கு என்னவோ சிலீர் என்று ஓர் உணர்ச்சி உண்டாயிற்று. அவள் திடீரென்று வியப் புடன் கூவினாள்: "இங்கே ஏது தண்ணீர்?"

உடனே, அவளுடைய திருஷ்டி மேஹாரின் தொடை மீது விழுந்தது. தொடையிலிருந்து ரத்தவெள்ளம் பெருகிக் கொண்டிருந்தது.

"இதென்ன மேஹார்!"

"இதுவா? இதுதான் இன்று அவ்வளவு ருசியா யிருந்த மீனின் ரத்தம்!"

மீனுவுக்கு ரகஸ்யம் தெரிந்துவிட்டது.

இன்று மேஹாருக்கு ஒரு மீனும் கிடைக்கவில்லை. அவன் தன் தொடையையே அரிந்து சமைத்து வந்து விட்டான்.

"மேஹார்! கடவுளின் முன்பாக உன்மீது ஆணை. இனி நாளையிலிருந்து என் முறையாகும். நீ இங்கே வர வேண்டாம்."

"அப்படியானல், என் இடத்துக்கு நீ வருவாயோ?"

"ஆம். நான் வருவேன்?"

"நீ ஒரு பெண்ணுயிற்றே! இவ்வளவு பெரிய நதியை எப்படிக் கடப்பாய்? மீனு உனக்கு ஒன்றும் பைத்தியம் பிடித்துவிட வில்லையே?"

"இதன் முடிவு நாளை இரவு தெரியும். கடவுளின் மீது ஆணையாய் நீ வரவேண்டாம்!"

## 3

சிந்து நதியில் இரு கரைக்கும் நடுவில் பனிரண்டு சுழல்கள் இருக்கின்றன. முப்பத்திரண்டு பாறைகள் இருக் கின்றன. பாறைகளின் நடுவே தேள்கள் இருக்கின்றன. அவ்வளவு பயங்கரமான நதியைக் கடப்பதற்காக, மீனு நள்ளிரவில் வீட்டைவிட்டுக் கிளம்பி விட்டாள். வீட்டி லுள்ள இனிப்பான பால், மிருதுவான படுக்கை இவைகளை விட்டு, சிந்துவின் அலையில் ஊஞ்சலாடுவதற்கு அவள் புறப் பட்டு விட்டாள்!

" யாரது? பெண்ணு?"

" ஆம், ஒரு பிரயாணி!"

" யார்? நீயா? மீருவா?"

" ஆம், சகோதரா. நீ யார்?"

" நான்தான் சிந்துவின் அலை. மீரு, நீ இந்தப் பாதி ராத்திரி வேளையில் எங்கே போகிருய்?"

" சிந்துவின் மறு கரைக்கு!"

" மீரு, சிந்துவில் நீந்தி நீ மறுகரையை அடைய முடியுமா? இன்னும் நீ சிறிய பெண். உனக்கு அவ்வளவு பலமேது?"

" அலைச் சகோதரா, பலத்தைக் கொடுப்பவர் அல்லா! நீந்திச் செல்வதற்கு உதவியாகச் சுண்டிப் பார்த்துத் தேர்ந்தெடுத்த ஒரு மண் குடம் கொண்டு வந்திருக்கிறேன்."

" இதெல்லாம் யாருக்காக?"

" மனதைப் பறி கொண்ட அந்த மேஹாருக்காக."

" அட ஆண்டவனே! மீரு, உலகம் உன்னைத் தூற்றுகிறதே! அது உனக்குத் தெரியவில்லையா?"

" சகோதரா, கேள்: பிரிய சகோதரா, என் நடத்தையைப் பற்றி, மேலே இருக்கிருரே அவர் கவனிக்கிருர். வழியிலே, அருகே, வீட்டிலே உள்ளவர்கள் என்னை இகழ்வதைப் பற்றி நான் ஏன் சட்டை செய்யவேண்டும்? என் தலைவிதியை நான் அனுபவித்துக் கொண்டிருக்கிறேன். உலகம் வீணுக என்னை இகழ்ந்து பேசித் தானுகக் கேடடைகிறது."

"ஏ மீனா, நீ உன் குலத்துக்கே மாசு தேடிவிட்டாய். முட்டாளும் நன்றியற்றவளும் ஆகிவிட்டாய். என்றாவது ஒருநாள் நீ உன் பலத்தையும் யௌவனத்தையும் சிந்து நதியில் இழந்து விடுவாய். இந்தப் பெரிய நதியைக் கிழித்துச் செல்லும்போது, என்றாவது ஒரு நாள் நீ ஆகாயத்திலுள்ள நட்சத்திரங்களை எண்ணப் போகிறாய். நீ முழுகி இறந்து விடுவாய். நீ சும்மா இரு. வீணைகக் கஷ்டங்களில் ஏன் சிக்கிக்கொள்கிறாய்? மரணத்தோடு ஏன் விளையாடுகிறாய்?"

இந்த உபதேசங்களைப் பொருட்படுத்தாமல் மீனா தண்ணீரில் குதிக்கத் தயாராகி விட்டாள். இடுப்பிலே துணியை வரிந்து கட்டிக் கொண்டாள். கையில் மண் குடத்தை எடுத்துக் கொண்டாள். நதியில் குதிப்பதற்காகக் கரையை வந்தடைந்தாள். அவள் மனது மறுகரையிலிருக்கும் காதலனைக் கலந்துவிட்டது. அலைமேல் நாட்டியமாடிக் கொண்டும், முழுகி முழுகி யெழுந்தும், மீனா தன் இரு கைகளாலும் தண்ணீரைக் கிழித்துக்கொண்டு சென்றாள்.

அன்பென்னும் கவசத்தைப் பூண்டு, உலக பயத்தையெல்லாம் உதறித் தள்ளி, தீரங்கொண்டு விட்டாள் மீனா. அவளுடைய அன்புக்கு முன்னே சிந்துநதியின் பயங்கரமான முதலைகளும் மீன்களும் அகோர அலைகளும்கூட எதிர் நிற்க முடியவில்லை. இம்மாதிரி அநேகம் இரவுகள் கழிந்தன.

கடுங்குளிர்! எவருக்கும் வீட்டை விட்டு வெளியேறத் துணிவில்லை. எல்லோரும் போர்வை போர்த்துக்கொண்டு படுக்கையில் கிடந்தார்கள். எங்கும் நிசப்தம் குடிகொண்டிருந்தது. இந்தச் சமயத்தில் மீனா தன் குடத்தை எடுத்துக்கொண்டு வெளியேறப் போகிறாள். அவள் வெளியே செல்வதைப் பார்த்துக்கொண்டிருந்த ஒருவன் அவளைத் தடை செய்து, "மீனா, நீ இந்தக் குளிரிலே விரைத்துச் சாகப்போகிறாய்" என்றான்.

மீனு: "சகோதரா, வேருெரு பெண்ணுயிருந்தால் கோடை காலத்து நடுப்பகலில்கூட இந்தத் தண்ணீரில் இறங்கமாட்டாள்; ஆனல், நான் கடுமையான குளிரிலும் கூடச் சந்தோஷமாக நதியில் குதிக்கிறேன். எனக்கு மரணத்தைப் பற்றிக் கொஞ்சம்கூடக் கவலே கிடையாது. காரணமென்னவென்ருல், என் கணவனின் அன்பு என் உள்ளத்தை ஒவ்வொரு நிமிஷமும் வாட்டிக் கொண்டிருக் கிறது. இல்லாவிட்டால் யாராவது மரணத்தோடு இம் மாதிரி விளேயாடுவார்களா?" என்ருள்.

"மீனு, நீ போகாதே; நதியிலுள்ள பாறைகளினூடே விஷப் பாம்புகளும் தேள்களும் மறைந்துகொண் டிருக்கின் றன. அவை உன்னேத் தீண்டிவிடும்."

மீனு: "சகோதரா, என் பாதையிலே பனிரண்டு சுழல்கள் இருக்கின்றன. முப்பத்திரண்டு பாறைகள் இருக் கின்றன. ஒவ்வொரு பாறையின் குகையிலும் விஷப் பாம்புகளும் வசிக்கின்றன. நான் இவை அனைத்தையும் நன்ருக அறிவேன். ஆனல், மற்றவர்கள் எந்தப் பாதையில் செல்வதற்குத் தயங்குகிருர்களோ, அதுதான் அன்புவழி. எவள் ஒருத்தி தண்ணீரைக் கண்டு பயந்து வீட்டிலேயே தங்கி விடுகிருளோ அவள் செயல் அன்புக்கு அடையாள மல்ல" என்ருள்.

மீனு இவ்வாறு சொல்லிவிட்டு, கச்சை கட்டிக் கொண்டு, பனிக்கட்டி நிறைந்த சிந்து நதியின் தண்ணீரில் குதித்தாள். அவள் வெகு தூரம் நீந்திச் சென்றுவிட்டாள். இக் கரையில் நின்றுகொண் டிருப்பவனுக்கு நீந்தும் சத்தம் அதிக நேரம் கேட்கவில்லே. அவன் வீட்டுக்குத் திரும்பிச் சென்றுவிட்டான்.

குளிர்காலம் சென்றது; வெயில் காலம் கழிந்தது; என்ருலும், மீனு மறுகரை யடைந்து நள்ளிரவில் தன்

காதலனைச் சந்திப்பதற்கு யாதோர் இடைஞ்சலும் உண்டாகவில்லை. இப்போது மழைகாலம் வந்துவிட்டது. சிந்து நதி இரு கரையும் புரண்டு பாய்கிறது. அலைகள் எழும்பி எழும்பி ஆகாயத்தைத் தொடுகின்றன. அதைக் கண்ட மாத்திரத்திலேயே எவருக்கும் மயிர்க் கூச்சல் உண்டாகிறது. அந்தப் பயங்கரமான சூறுவளிகூட, தினந்தோறும் நிகழக் கூடிய விளையாட்டாக ஆகிவிட்டது மீனுவுக்கு. மீனு தன் குடத்துடன் கரையை வந்தடைந்தவுடன், யாரோ ஒரு மனிதன் அவளை நெருங்கிச் சொன்னான்.

"மீனு, பல்லைக் கிட்டும் இந்தக் குளிர்ந்த தண்ணீரில் நீ ஏன் இறங்குகிறாய்? இந்த அலைகள் பயங்கரமாக ஒன்றோடொன்று மோதிக் கொள்கின்றன, பார். இந்தப் பயங்கர அலைகள் ஒருவேளை உன் பிராணனை அபகரித்து விடுமோ என்னவோ! உயர்ந்து நிற்கும் கரைகளைப் பார். இதோ அதோ என்று கரைந்து வரும் கரைகள் உன்மீது இடிபோல் உடைந்து விழும்போல் இருக்கின்றனவே! சிறிது நிதானித்துச் செல்."

"சகோதரா, நான் எப்படிச் சிறிது நேரமேனும் தாமதிக்க முடியும்? எங்கள் சந்திப்பில் சிறிது தவக்கம் ஏற்பட்டுவிட்டாலும் என் மேஹார் தவியாய்த் தவித்துப் பிராணனை விட்டுவிடுவாரே!"

மீனு தண்ணீரில் பிரவேசித்தாள். மீனைப்போல் சரளமாய் நீந்திச் சென்றாள். இம்மாதிரி தினந்தோறும் இரண்டாம் ஜாமத்தைத் தன் காதலனுடன் கழித்துவிட்டு, எஞ்சிய இரவிலேயே இக் கரை வந்தடைந்தாள்.

இதன் மத்தியில் தன் கௌரவத்தை நிலைநாட்டுவதற்காக, லோபியான தந்தை மீனுவை ஒரு நாள் ஒரு குரூபியான குய ஜாதிப் பையனுக்கு விவாகம் செய்து வைத்துவிட்டான். விவாகத்தின்போது, மீனு பகிரங்கமாக ஆட்சே

பித்துக் கோபித்தாள்; ஆனால், கலியாணமோ கட்டாயமாக நடந்தேறி விட்டது. அவள் மாமியார் வீட்டுக்குப் போக மறுத்தபோது, தந்தை அவள் கணவனைத் தன் வீட்டிலேயே நிறுத்திக் கொண்டான். அப்படியிருந்தும், மீனு முதல் இரவே கணவனை எச்சரிக்கை செய்து வைத்தாள்: "நீ என் சகோதரன் போலவும் தந்தை போலவும், என்னிடம் நடந்துகொள்ள வேண்டும். மறுபடியும் இந்த அறையை நாடி வராதே."

மீனு தன் சுற்றத்தாருடன் கலந்து கொள்வதில்லை. உலகத்திலுள்ளோரிடமிருந்து அவள் மனம் வேறுபட்டு விட்டது. ஐந்து முறை நமாஸ் செய்வதிலும் குரானிலுள்ள சுலோகங்களை மனனம் செய்வதிலும், உபவாசத்திலும், அவளுடைய பகல் வேளை பெரிதும் கழிய ஆரம்பித்தது. சிந்துவின் மறுகரையில் உட்கார்ந்திருக்கும் தன் கணவனுக்கு இரவு நேரத்தையெல்லாம் ஒப்படைத்து விட்டாள்.

மீனுவின் சுய ஜாதிக் கணவனால் இதையெல்லாம் சகித்துக்கொள்ள முடியவில்லை. அவன் அம்பைவிடக் கூர்மையான வசை மொழிகளைப் பொழிய ஆரம்பித்து விட்டான். மீனு தனிமையில் உட்கார்ந்து எண்ணமிடலானாள்:

"என்னுடைய இந்தக் கணவன் கடவுளைத் தொழுவதுமில்லை; தன் அழுக்குத் துணிகளைத் துவைப்பதுமில்லை. சாயங்காலமானவுடன் நீண்ட குறட்டை விட்டுத் தூங்கி விடுகிறான். பொழுது புலர்ந்ததும் ஒரு புறமாகப் புரண்டு படுத்துக்கொள்கிறான். நடு ராத்திரியில் எழுந்து சாப்பிட அழுகிறான். இப்படி இருந்தும் இவன் ஒரு ஆண்மகனும்! என்னைச் சுடுசொல் சொல்கிறான். ஏனோ இவனுக்கும் எனக்கும் கால்கட்டுக் கட்டினார்கள்? எனக்கு இம்மாதிரியான கணவனைப் பற்றி அக்கரையில்லை. நான் இவனை விட்டு விட்டுச் சிந்துவின் மறுகரைக்கே சென்று விடுகிறேன்."

கணவன் செய்யும் துன்பமும் ஜனங்கள் கிசுகிசு என்று ரகஸ்யம் பேசுவதும் நாளுக்கு நாள் விருத்தி யாயிற்று. மீஞவின் பெற்ரோர்கூட, அவள் சாவதே நல்லது என்று கருதினுர்கள். உண்மையிலேயே மீஞவின் சாவு சமீபித்துவிட்டது.

இரவு இருட்டாயிருந்தது. ஆனல், மாதமோ வைகாசி மாதம். வைகாசி மாத இரவு காதலர்க்கு உகந்தது. படகின் பாய் மரம் போல் மீஞவின் மேக வர்ணப் போர்வையின் தலைப்பு, காற்று மோதி விரிந்தது. சிந்து நதியின் மறுகரையை யடைவதற்காக, மீஞவுக்கு இரண்டு இறக்கைகளைச் சிருஷ்டி கர்த்தா அருளியது போலிருந்தது அந்தப் போர்வை. தன் மார்பு மீஞவோடு விளையாடுவதற் காக விம்மியதுபோல் சிந்துநதி பொங்கியது. மினுமினுக் கும் நட்சத்திரங்கள், மீஞ நீந்துவதைப் பார்ப்பதற்காகத் தொங்கலிட்டதுபோல், கண்சிமிட்டிக் கொண்டிருந்தன.

கரையில் நின்றுகொண்டு மீஞ எல்லாத் திக்குகளிலும் தன் பார்வையைச் செலுத்தினள். எல்லா ஜீவராசிகளும் இன்று மீஞவோடு நட்புப் பாராட்டுபவைபோல் இருந்தன. உலகம் எவளை நிந்தனை செய்ததோ, அவளை இன்று தேவதைகள் தன் மயமாக்கிக் கொண்டுவிட்டன.

கச்சை கட்டிக்கொண்டு மீஞ தண்ணீரில் குதித்துவிட் டாள். சிந்துநதியின் அலைகள் பூப்பந்தாடுவதுபோல் அவளை மேலே தூக்கின. அழகிய வர்ணச் சித்திரங்கள் தீட்டப் பட்ட குடத்தை முகத்தில் அணைத்துக்கொண்டு, மீஞ அலை யைக் கடக்க ஆரம்பித்தாள். அவளுக்கு இன்று காற்றும் தண்ணீரும் மிகவும் சுகம் அளித்தன. "கடவுள் அனுக் கிரகத்தினல் மேஹார் இன்று இங்கே இப்போது என் னுடன் இருந்தால், இருவரும் கைகோத்துக் கொண்டு சமுத்திரம் வரையில் நீந்திச் செல்லலாமே! பாதாள லோகம்

வரை சென்று அங்கே அமைதியாகக் காலம் கழிக்க லாமே!'' என்று அவள் எண்ணினுள்.

"இன்று தண்ணீரை விட்டு நான் வெளியேறப் போவதில்லை. தண்ணீரிலிருந்தபடியே மேஹாரைக் கூப்பிடு வேன். தண்ணீரை விட்டு வெளியே வந்தால் மறுபடியும் உலகத்தில் வாழ்வதற்கு மோகம் உண்டாகும்...''

கற்பனைக் குதிரைமேல் மீரு இம்மாதிரி சவாரி செய்து கொண்டிருந்தாள். திடீரென்று அவளுடைய பிடியிலிருந்து குடம் நழுவ ஆரம்பித்தது. "குடத்தின் மண் ஏன் இப் படிக் கொஞ்சம் கொஞ்சமாக உதிர்ந்து போகிறது? நான் சுண்டிச் சுண்டி யெடுத்து வந்த மண் குடத்தின் மேல் இன்று யாரேனும் ஒருவேளை மந்திரம் போட்டு விட்டார் களோ! ஆயிரத்தில் ஒரு குடத்தைத் தட்டித் தட்டிப் பார்த்து நான் தேர்ந்தெடுத்தேன். குயவன் இதைப்பற்றி ஒன்றுமே சொல்லவில்லையே. அப்படியிருந்தும் இந்தக் குடம் எப்படி என்னிடம் வந்து சேர்ந்தது! ஏ அல்லா! இப்போது நீதான் என் கணவனேடு என்னைச் சேர்த்து விடவேண்டும்.''

அவளுடைய எண்ண ஊற்று அடைபட்டுவிட்டது. இதற்குள் மண்குடம் தண்ணீரில் முழுகி விட்டது. பட படவென்று அடித்துக் கொண்டிருந்த மீருவின் கைகளில் கொஞ்சம்கூட மண் தங்கவில்லை. அவளுக்கென்னவோ நீந்தத் தெரியும்; ஆனுலும், மேஹாரைக் காக்கவைத்துக் கோபமுண்டாக்கி வேடிக்கை பார்க்கவேண்டும் என்ற மனோரதத்தில் சிக்கியவளாய், அவள் மிக மெதுவாகவே நீந்திச் சென்ருள். கரைக்கு வெகு தூரத்திலேயே அவள் மிகவும் களைப்படைந்து தங்கிவிட்டாள். யாரோ தன் குடத் தின்மேல் மந்திரம் போட்டு விட்டார்கள் என்ற ஆச்சரிய மான எண்ணம் அவளுக்கு இப்போது உண்டாயிற்று.

"ஆயிரக் கணக்கான குடங்களிலிருந்து ஒரு நல்ல குடத்தைத் தேர்ந்தெடுத்தேன். அதன் மேல் சித்திரம் வரைந்தேன். இன்று அதே குடம் எப்படியோ தண்ணீரில் முழுகிவிட்டது. நான் பக்குவப்படுத்தி யிருந்த குடத்தையே, என் துர்ப்பாக்கியம் பச்சையாக்கி விட்டது" என்று அவள் புலம்பினுள்.

குடம் மாற்றி வைக்கப்பட்ட குடம். தங்கள் குலத்தைக் கெடுத்த பெண்ணை முழுகடிப்பதற்காகவே, மீனுவின் பெற்ருேர், அவளுடைய குடத்துக்குப் பதிலாக அதே மாதிரியான மற்ருெரு குடத்தை மாற்றி வைத்து விட்டார்கள். அன்பும் கள்ளம் கபடமற்ற உள்ளமும் படைத்தவளான மீனுவுக்கு இதைப்பற்றிய தகவல் தெரியாது. அவள் என்றும்போல் இன்றும் அதே இடத்திலிருந்து குடத்தை எடுத்துக்கொண்டு, கரையை வந்தடைந்தாள்.

## 4

மீனு இன்று ஆதாரமற்றவளானுள். தண்ணீரைக் கிழித்து முன்னேறுவதற்கு விரும்புகிருள்; ஆனுல் கைகளில் வலிமை யில்லை. கருக்கிருட்டு; அக் கரையில் யாருமே காணப்படவில்லை; இக் கரையிலிருந்து மீனுவை யாரும் காணமுடியாது. அக் கரையில் ஆடு மாடுகள் மேய்கின்றன. அவைகளின் கழுத்தில் கட்டப்பட்டிருக்கும் மணிகள் விட்டுவிட்டு ஒலிக்கும் ஓசை கேட்கிறது. மேஹாரின் மதுரமான குழலோசையும் கேட்கிறது.

"இந்த மணிகள் எங்கே யிருந்து ஒலிக்கின்றன? என் பிரியமான அக் கரை இன்னும் எவ்வளவு தூரம் இருக்கிறது? இன்று இரவு பூராவும் என் வரவை நோக்கி வீரன் மேஹார் குழலூதிக் கொண்டே யிருப்பான். அவனுடைய

குழலிலிருந்து எழும் பவித்ரமான மூலமந்திர ஓசையின் மேல்காது வைத்து இத்தனை அலைகளையும் கடந்துவிட்டேன்; ஆனால், இப்போது என் கைகளில் பலம் இல்லை; கால்களிலும் பலம் இல்லை. பரவாயில்லை; குடம் என்னவோ மோசம் செய்து விட்டது. அல்லாவே! எங்கள் சந்திப்பில் ஒருவித மோசமும் உண்டாக்க வேண்டாம்! எதிரே மேஹார் தண்ணீரில் குதித்துவிட்டான். அவனுடைய தலைப் பாகை நனைந்து மிகவும் பாரமாகியிருக்கும். ஆண்டவனே! தண்ணீர் ஆழமோ, இல்லையோ; அதைப்பற்றி எனக்குக் கவலை கிடையாது. நீந்திச் சென்று நான் என்னுடைய மேஹாரின் முகத்தைக் காண்பதற்கு உதவி செய்யப் பிரார்த்திக்கிறேன்.''

ஆனால், அவளுக்கு அவனது முகத்தைப் பார்க்கக் கொடுத்துவைக்க வில்லை. குழலோசையைக் கேட்டுக் கொண்டே தண்ணீர்ப் படுக்கையில் தனிமையாக இருக்க வேண்டியதுதான். சிந்து நதியின் மத்திய பாகத்தை அடைந்தவுடன், அபலை மீரா களைப்பு மேலிட்டுச் செயலற்று விட்டாள். கண்கள் இருண்டு விட்டன. தலை சுழல ஆரம்பித்தது.

கண்கள் திறந்தன. மரணதேவன் கண்முன் நிற்கிறான். இருந்தபோதிலும், அவளுடைய இதயம் மேஹாரிடம் சென்று விட்டது.

குழலோசை மிகவும் இனிமையாய் இருந்தது. குழலின் கீத ஆனந்தத்தைப் பங்கப்படுத்த மீரா விரும்ப வில்லை. ஆனால் அவளுடைய தேகம் ஜலத்திலே சமாதியாகத் தயார் ஆகிக் கொண்டிருந்தது. ஓர் அலை வந்து மோதி மீராவின் காலைக் குலுக்கிச் சென்று விட்டது. அவள் மிதந்து சென்றாள். மிதந்து செல்லும்போது, அவள் வாயிலிருந்து பலமாக இதயத்தைப் பிளக்கும் 'கீச்' என்ற ஒரு சத்தம் பீறிட்டது: "மேஹார்! மேஹார்!! ஓ மேஹார்!!!''

சப்தம் எழும்பியதும், குழலோசை நின்று விட்டது. "இதோ வருகிறேன்" என்ற சப்தத்துடன் மறு கரையில் யாரோ தண்ணீரில் குதிக்கும் ஓசை கேட்டது.

தண்ணீரில் முழுகி மிதந்து வரும் மீனு என்னவோ அலைமோதியவுடன் கூக்குரலிட்டு விட்டாள். ஆனால், உடனே அவள் பச்சதாபப் பட்டாள். அன்று மீன் கிடைக்காதபோது, மேஹார் தன் தொடையைக் கீறி மாமிசம் எடுத்த ரணம் இன்னும் ஆறவில்லை என்பது அவளுக்கு ஞாபகம் வந்தது. "அந்த ரணத்துடன் மேஹார் நீந்த முடியாது; அப்படி நீந்தி வந்தால் எனக்காகப் பிராணனைப் பொருட்படுத்தாமல் நீந்தி வரவேண்டும்" என்று நினைத்தாள்.

முதலில் அவள் குடத்தைப் பிடித்துக்கொண்டு நீந்தினாள். குடம் முழுகியதும், இரண்டு கைகளையும் பரப்பி நீந்தினாள். முழுகியவுடன் நதியிலிருந்து, நிர்க்கதியான ஒரு பெண் குரல் எழும்பியது: என் பிரிய சாகாட்! என் மேஹார்! நீ திரும்பிச் சென்றுவிடு. நதியிலுள்ள ரத்தத்தை உறிஞ்சும் பிராணிகள் என்னைச் சூழ்ந்து கொண்டு விட்டன.

கடைசியாக, மறுபடியும் குரல் எழும்பியது: "வராதே, மேஹார்! நீ இங்கே வராதே."

ஆனால், மேஹார் யாருக்காகத் திரும்பிச் செல்வது?

அவன் பல தடவை முழுகினான். குகைகளைக் கண்டான்; ஆனால், மீனுவைக் காணமுடியவில்லை. அவன் தொடையின் ரணம் கிழிந்தது. அதிலிருந்து ரத்தம் பெருக்கெடுத்தது. சிறிது நேரத்தில் பிரக்ஞையற்ற அவன் சரீரம் மீனு! மீனு!! என்ற ஓலத்துடன், ஆழமான ஜலராசிக்குள்ளே மீனுவைத் தேடிக்கொண்டே சமாதி அடைந்து விட்டது.

பொழுது விடிந்தது. அன்னை சிந்து இரு காதலர்களின் சவங்களையும் ஒன்ருகவே ஒரே கரையில் கொண்டு வந்து சேர்த்தாள். மீனுவின் சுற்றத்தார்கள் சிந்து நதிக் கரையில் வந்து கூடினர்கள். காதலர் இருவரும் ஒன்ருகவே புதைக்கப்பட்டார்கள். மேலே சமாதி ஒன்றும் எழும்பியது. உயிரோடிருந்தவர்களை ஜனங்கள் பிரித்தார்கள். ஆனல், இறந்தவர்களைப் பிரிக்க, யாருக்கும் மனமில்லை; துணிவுமில்லை.

# வேடன் கடிதம் (குஜராத்தி)

**தூமகேது**

நேற்று இரவு மேகங்கள் சூழ்ந்த ஆகாயத்தில் சிலசில நட்சத்திரங்கள் மினுமினுத்துக் கொண்டிருந்தன. மனிதனின் மனதில் ஜொலிக்கும் மதுரமான எண்ணங்களைப் போல் அவை மின்னின. குளிர்காலப் பனிக்காற்றின் குளிரிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டுப் பழைய கோட் ஒன்றை அணிந்துகொண்டு, பட்டணத்தின் நடுவே, ஒரு தொண்டு கிழவன் நடந்துகொண்டிருந்தான். பட்டணம் நிசப்தமாயிருந்தது. செல்வ போகங்களை அனுபவிக்கும் மனிதர்கள் வாழும் அநேக வீடுகளிலிருந்து, பெண்மணிகளின் மெல்லிய இனிய குரல்போல, கடிகார மணியோசை அந்தக் கிழவனைப் பின்தொடர்ந்து வந்தது. நாய்கள் குரைக்கும் ஒலி, வெகு தூரத்திலே நடந்து வரும் ஒருவனுடைய காலடிச் சத்தம், அகாலத்தில் விழித்துக் கொண்டு கூவும் பட்சியின் ஓசை, இவைகளைத் தவிர, பட்டணத்தில் அமைதியே நிலவி யிருந்தது. ஜனங்கள் சுவாரஸ்யமாகத் தூங்கிக்கொண் டிருந்தார்கள். குளிர்காலம், ஆகையால், இரவு கும்மென்று இருண்டுவிட்டது. 'உள்ளொன்று வைத்துப் புறமொன்று' பேசும் சுபாவமுடைய மனிதர்களைப் போலும், கூர்மையான அம்பு பாய்வது போலும், கடுங்குளிர் எங்கும் தனது ஆட்சியைச் செலுத்தியது. உடல் நடுங்கினாலும் உள்ளத்திலே திடசித்தமும் அமைதியும் கொண்டவனாகவே, கிழவன் நடந்தான். பட்டண வாசலைக் கடந்து, ஒரு நேர்பாதையை வந்தடைந்தான். அவன் தன் ஊன்றுகோலின் உதவியைக்கொண்டு மெள்ள மெள்ள நடந்து சென்றான்.

ஒரு பக்கத்தில் மரங்களின் வரிசை; மறு பக்கத்தில் பட்டணத்தின் நந்தவனம். இங்கே குளிர் மிக அதிகம்.

இரவு மிகவும் பயங்கரமா யிருந்தது. காற்று கடுமையாய் வீசியது. சுக்கிரனின் இனிய மந்தமான ஒளி, பூமியின் மேல் பனித் திரை விரித்தது போல் பரவி யிருந்தது. நந்தவனத்தின் ஒரு புறத்தில் புதிய மாதிரியில் கட்டிய நாகரிகமான வீடுகள் நின்றன. அந்த வீடுகளின் ஜன்னல் களிலிருந்தும் மூடிய கதவிடுக்குகளின் வழியாகவும், ஜோதிமயமான விளக்குகளின் ஒளி வெளியே வீசிக் கொண்டிருந்தது.

பக்தி மிகுந்த பக்தன், கோயிலின் கோபுரத்தைத் தரிசித்தவுடன் ஆனந்தமடைகிறான்; அதே போல், கிழவன் ஒரு கட்டிடத்தின் நிலைவாசலுக்கு மேலிருக்கும் கமானைக் கண்டவுடன் ஆனந்தமடைந்து விட்டான். கமானில் எழுத்துக்கள் பொறித்து அழுக்கடைந்த ஒரு பலகை தொங்கியது. அதுதான் தபாலாபீஸ்.

தபாலாபீஸுக்கு வெளியேயுள்ள திண்ணையின் மீது கிழவன் உட்கார்ந்து விட்டான். உள்ளேயிருந்து விசேஷ மான குரல் ஒன்றும் வரவில்லை. ஒருவரோடொருவர் பேசிக்கொள்ளும் சப்தந்தான் கேட்டது. அதுவும் ஐந் தாறு பேர் ஆபீஸ் வேலை விஷயமாய் ஏதோ பேசிக்கொண் டிருந்தார்கள்.

'போலீஸ் சூப்பரின்டென்ட்' என்று ஒரு குரல் கேட்டது. கிழவன் திடுக்கிட்டு எழுந்தான்; ஆனால் மறுபடியும் தானாகவே அமைதிகொண்டு உட்கார்ந்து விட்டான். நம்பிக்கையும் பாசமும்தான் அவனுடம்புக்கு, இந்தக் குளிரிலும் கணப்புப்போல் உஷ்ணம் கொடுத்தது.

உள்ளிருந்து குரல்மேல் குரல் வந்துகொண்டே யிருந்தது. காகிதங்களைப் பிரித்து வழங்கும் சிப்பந்தி ஆங்கிலக் கடிதங்களின் விலாசத்தை படித்துப் படித்து, தபால்காரன் வசம் வீசி எறிந்துகொண் டிருந்தான்.

கமிஷனர், சூப்பரின்டென்ட், திவான் சாஹேப், லேப்ரேரியன்—இவ்விதமாக, ஒன்றன்பின் ஒன்ருய் வாசித்து அனுபவமுள்ள அவன், வெகு வேகமாகக் கடிதங்களை விசிக்கொண் டிருந்தான்.

இதற்குள் உள்ளேயிருந்து விசித்திரமான ஒரு குரல் கிளம்பியது. 'கோச்வான் அலிபாபா.'

கிழவன் எழுந்து நின்ருன். சிரத்தையுடன் ஆகா யத்தை நோக்கினன்; படிமீதேறிக் கதவின்மேல் கையை வைத்தான்.

'கோகுல் !'

'யார் அது ?'

'அது என் கடிதம் தானே ?...நான் வந்திருக்கிறேன்!'

கேலியும் விகடமும் கலந்த பதில்தான் அவனுக்குக் கிடைத்தது.

'ஐயா' இவன் ஒரு பைத்தியக்காரக் கிழவன். இவன் எப்போது பார்த்தாலும், இங்கே இடிபட்டுச் சாக வந்து விடுகிருன். ஏதோ இவனுக்குத் தபால் வரப்போகிறதாம். அதை வாங்க, ஓயாமல் வந்து நிற்கிருன்.

தபாலைப் பிரிக்கும் சிப்பந்தி, போஸ்ட் மாஸ்டரிடம் இவ்வாறு சொன்னன். மறுபடியும் கிழவன் தன் இடத்துக்குப் போய் உட்கார்ந்து விட்டான். ஐந்துவருஷ காலமாய்த் தபால் ஆபீஸுக்கு வருவதும் போவதும், கிழவனுக்கு ஒரு தினசரிக் கடமையாகிவிட்டது.

அலி இதற்குமுன் ஒரு கெட்டிக்கார வேடன். அபினி தின்னும் பழக்கமுள்ள ஒருவன் எப்படி அபினி தின்னமல் இருக்க முடியாதோ அதேபோல, அலி ஒரு நாளாவது வேட்டையாடாமல் இருக்கமாட்டான். மண்

ளோடு மண்ணையப் பூமியில் உலவும் பல நிறங் கலந்த கௌதாரியின்மேல் அலியின் பார்வை விழுந்தால், அது அவனது குறியில் கட்டாயம் பட்டு விழுவேண்டியதுதான். அவனது கூரிய பார்வை, முயலின் பொந்துக்குள்ளும் ஊடுருவிச் செல்லும். அக்கம் பக்கத்தில் உலர்ந்து பழுப் பேறி வெளிரிய புல் பூண்டுகளில் மறைந்துகொண்டு, தன் இரு காதுகளையும் மேலே உயர்த்தி உட்கார்ந்திருக்கும் கெட்டிக்கார முயலின் சாம்பல் நிறத்தை, சிற்சில சமயம் வேட்டை நாய்கள்கூடக் கவனிக்காமல் கடந்து சென்று விடக்கூடும்; முயலும் உயிர் தப்பித்துக் கொள்ளலாம். ஆனால், இத்தாலிதேசத்துக் கருடனைப்போல் கூரியபார்வை யுள்ள அலியின் கண்ணுக்கு, அந்த முயல் தப்ப முடியாது; அடுத்தநிமிஷமே அது சுருண்டு விழவும் வேண்டியதுதான். ஆனால், வாழ்க்கையின் அந்திம காலம் சமீபித்தவுடன், வேடன் திடீரென்று தலைகீழாக மாறிவிட்டான். இவனு டைய ஒரே பெண் கலியாணமாகி, மாமனார் வீட்டுக்குப் போய்விட்டாள். மருமகன் ராணுவத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்தான். மகள் மருமகனோடு பஞ்சாபுக்குச் சென்றுவிட்டாள். மகளிடம் உள்ள பாசத்தாலேயே கிழவன் ஐந்து வருஷமாக உயிரை வைத்துக்கொண் டிருக்கிறான். ஆனால், அவளிடமிருந்து ஒரு கடிதம்கூடக் கிடைக்கவில்லை. இப்போதுதான் கிழவனுக்குப் பாசத்தின் தன்மையும் கொடுமையும் விளங்கின.

இதற்கு முன்போ தாயிழந்து தவிக்கும் கௌதாரிக் குஞ்சுகள் அங்குமிங்கும் ஓடுவதைக் கண்டுகூட அவன் மனமகிழ்ச்சியே அடைவான். இது அவனது—ஒரு வேடு வனின்—ஆனந்தம். வேட்டையின் மகிழ்ச்சி அவனது ஒவ்வொரு நரம்பிலும் பரவியிருந்தது. ஆனால், மரியம் அவனைப் பிரிந்துசென்றதினத்திலிருந்து, அவனதுவாழ்க்கை ஒரே சூனியமாகிவிட்டது. அன்றிருந்து அலி வேட்டை

யாடுவதைத் திடசித்தத்துடன் அறவே ஒழித்துவிட்டான்; தானியங்கள் நிறைந்த வயலைப் பார்த்துக்கொண்டே யிருப்பான். அன்பினால்படைப்பும், பாசத்தினால் கண்ணீரும் நிகழ்வது இயற்கையின் நியதி என்பதை, அவன் இப்போதுதான் முதன் முதலாக உணர்ந்தான்.

இதற்குப் பிறகு, பலாமரத்தின் அடியில் உட்கார்ந்து கொண்டு, உள்ளமே உடைந்து புலம்புவான். நாள் தோறும் அதிகாலையில் நான்கு மணிக்கே எழுந்து தபாலா பீசுக்கு வருவது அவனது வழக்க மாகிவிட்டது. ஆனால், அவனுக்கென்னவோ ஒரு நாளும் கடிதம் மட்டும் வருவதே யில்லை; கட்டாயம் வரும் என்ற நம்பிக்கை அவனுக்கிருந் தது. சிரத்தையும் ஆசையும் நிரம்பிய ஆனந்தத்தில் முழுகிய பக்தனைப்போல், அவன் ஒவ்வொரு நாளும் எல் லோருக்கும் முன்பே இவ்வாறு தபாலாபீசுக்கு வந்து உட் கார்ந்து விடுவான். கிழவனுக்கு தபாலாபீஸ் ஏதோ ஒரு புண்ய க்ஷேத்திரம் போல் ஆகிவிட்டது. அவன் எப்போ தும் அதே இடத்தில், அதே மூலையில்தான் உட்காருவான். அவனது நிலைமையை எல்லோரும் அறிந்துகொண்டு, அவனைப் பரிகசிப்பார்கள். அவனுக்குக் கடிதம் வராம லிருக்கும்போதே, அவர்கள் சிற்சில சமயம் அவனைக் கூப் பிடுவார்கள்; அவனும் தான் உட்கார்ந்திருந்த இடத்தி லிருந்து தபாலாபீஸ் கதவுவரையில் ஓடி வருவான். இது கண்டு, அவர்கள் எல்லாம் நகைப்பார்கள். கூர்ந்த சிரத் தையும், எல்லையற்ற ஆவலும் உள்ளவனாய், அவன் ஒவ் வொரு நாளும் வருவான்; வெறுங் கையோடு திரும்பு வான்.

அலி உட்கார்ந்து கொண்டிருந்தான். இதற்குள் ஒவ் வோர் ஆபீசிலுமிருந்து சேவகர்கள், தங்கள் தங்கள் கடி தத்தை எடுத்துச் செல்லுவதற்காக, இங்கே வர ஆரம்பித்

தார்கள். அவர்கள் வந்து கூடிவிட்டால், பட்டணத்தி லுள்ள எல்லா ஆபீசர்களின் வீட்டுப் புராணமும் இங்கே நடைபெறும்.

கதவு திறந்தது. விளக்கொளியில், எதிரேயுள்ள நாற் காலியில், சுரைக் குடுக்கை போன்ற தலையோடு, எப் போதும் துக்கமே குடிகொண்ட முகத்துடன் கூடிய போஸ்ட் மாஸ்டர் உட்கார்ந்திருந்தார். அவருடைய நெற்றி யிலோ, முகத்திலோ ஜீவகளை கிடையாது. கண்ணிலே துரு துருப்பு இல்லை.

அலி இன்னும் அங்கேயே உட்கார்ந்திருந்தான்.

'போலீஸ் கமிஷனர்' என்று சிப்பந்தி கூப்பிட்டான். கர்வம் கொண்ட ஒரு நவயுவன் 'போலீஸ் கமிஷனரின் கடிதத்தை பெறுவதற்குக் கையை நீட்டினான்.

'சூப்பரின்டெண்ட்.'

மற்றொரு சேவகன் வந்து சேர்ந்தான். விஷ்ணு பக்தன் சஹஸ்ரநாம பாராயணம் செய்வதைப்போல், சிப் பந்தி ஒவ்வொரு நாளும் இம்மாதிரியாகத் தனது வேலை யைச் செய்து கொண்டிருந்தான்.

எல்லோரும் சென்று விட்டார்கள். அலி எழுந்து தபாலாபீசுக்கு ஒரு கும்பிடு போட்டுவிட்டுச் சென்றான். ஒரு நூற்றாண்டுக்கு முந்திய கிராமத்தான். அவனிடம் ஏதாவது கெட்டிக்காரத்தனம் இருக்கிறதா!

'இவன் பைத்தியக்காரனா என்ன?' என்று போஸ்ட் மாஸ்டர் கேட்டார்.

'யார், யார்? அலியா? அவன் ஐந்து வருஷமாகக் கடிதம் எடுத்துப்போக வந்து கொண்டே இருக்கிறான். மாரியோ, கோடையோ எந்தக் காலமானாலும் சரிதான்;

இவன் தப்பாமல் வந்துவிடுவான். இவனுக்கு எப்போ தாவது கடிதம் வந்திருக்கிறதா என்ருல், அதுதான் இல்லை' என்று பதில் சொன்ஞன் சிப்பந்தி.

'எவராயிருந்தால், என்ன? வேலையற்றவர் எவராவது உண்டா? யார்தான் எப்போதும் கடிதம் எழுதிக் கொண்டேயிருப்பார்கள் ?'

'ஸார், இவனுக்கு மூளை கெட்டுப் போய்விட்டது. முன்பெல்லாம் இவன் பெரிய அஞசாரங்கள் செய்திருக்க வேண்டும். இவன் ஏதோ கோவிலில் என்னவோ பாபத்தைச் செய்திருக்க வேண்டும். அதன் பலனைத்தான் இப்போது அனுபவிக்கிருன்' என்று தபால் சிப்பந்தி சொன்ஞன்.

'பைத்தியக்காரர்கள் மிகவும் விசித்திரமானவர்கள்!'

'ஆம், நான் ஒரு பைத்தியத்தை ஆமதாபாத்தில் பார்த்தேன். அவன் நாள் பூராவும் குப்பைகளைக் குவியல் குவியலாய்க் குவித்துக் கொண்டிருந்தான். வேறு ஒன்றுமே செய்வதில்லை. மற்ெருரு பைத்தியம் மாலை வேளையில் நதிக்கரையிலுள்ள ஒரு பாறையின்மேல் தண்ணீரை வாரி வாரி இறைத்துக் கொண்டிருப்பான்.'

'ஐயா, நான் கண்ட இன்ெனுரு பைத்தியம் நாள் பூராவும் இங்குமங்கும் அலையும். மற்ெருரு பைத்தியம் உண்டு. அது எப்போதும் ஒரே பாட்டைப் பாடிக் கொண்டேயிருக்கும். வேருெரு பைத்தியமும் நான் பார்த்திருக்கிறேன். அது தன்னைத்தானே கன்னத்தில் அறைந்துகொண்டு, யாரோ தன்னை அறைகிருர்களென்று ஓலமிடும்.

தபாலாபீஸில் பைத்தியங்களின் புராணம் ஆரம்பித்து விட்டது. தினந்தோறும் இவ்வாறு பத்து அல்லது ஐந்து

நிமிஷ நேரமாவது பைத்திய புராணச் சர்ச்சை செய்து, தங்கள் மனத்தை உற்சாகப் படுத்திக்கொள்ளும் பழக்கம் எல்லாச் சிப்பந்திகளுக்கும் ஏற்பட்டு விட்டது. கடைசியாக, போஸ்ட் மாஸ்டர் எழுந்து செல்லும் போது சொன்னார்: 'பைத்தியங்களுக்கென்று ஓர் உலகம் இருக்கிறது! இந்தப் பைத்தியங்கள் நம்மெல்லோரையும் தான் பைத்தியங்கள் என்று எண்ணி யிருப்பார்கள். ஒரு வேளை பைத்தியங்களின் கற்பனையே கவிஞனின் கற்பனையாகவும் இருக்கலாம்'.

இவ்வாறு சொல்லிவிட்டுச் சிரித்துக் கொண்டே, போஸ்ட் மாஸ்டர் வெளியே சென்றார். குமாஸ்தாக்களில் ஒருவன் நேரம் கிடைக்கும் போதெல்லாம் கவிதை புனைபவன். ஆகையால், அவனை எல்லோரும் கோபித்துக் கொள்வார்கள். இதற்காகத் தான், போஸ்ட் மாஸ்டரும் தமது கடைசி வார்த்தையை, அவன் பக்கம் திரும்பிச் சிரித்துக்கொண்டே சொன்னார். தபாலாபீஸில் முன் போலவே அமைதி குடிகொண்டது.

ஒரு முறை கிழவன் அலி இரண்டு மூன்று நாள் வரை வரவில்லை. அலியின் உள்ளத்தை அறிந்து, அவனிடம் பரிபூரண அநுதாபமும் பரந்த நோக்கமும் காட்டக் கூடியவர்கள், தபாலாபீஸில் உள்ளவர்களிலே யாரும் கிடையாது. அலி ஏன் வரவில்லை என்று கவலைப் படுவோரும் யாரும் இல்லை. பிறகு, ஒரு நாள், அலி வந்தான்; ஆனால், அன்று அவன் மேல் மூச்சு விட்டுக் கொண்டிருந்தான். அவன் முகத்திலே அந்திம காலத்தின் தெளிவான சின்னம் தென்பட்டது.

இன்று அலி அதைர்யமடைந்து, 'என் மரியமிடமிருந்து ஏதாவது கடிதம் உண்டா?' என்று போஸ்ட் மாஸ்டரைக் கேட்டான்.

அன்று போஸ்ட் மாஸ்டர் கிராமத்துக்குச் செல்வதற்கு வேண்டிய முன்னேற்பாடுகளில் முனைந்திருந்தார். இந்நேரத்தில் இந்த அற்புதமான கேள்வியைச் சகித்துக் கொள்ளக்கூடிய பொறுமை, அவர் உள்ளத்தில் குடி கொள்ள வில்லை.

'நீ யாரையா?'

'என் பெயர் அலி'—அலியின் இந்த அசம்பாவிதமான பதில் கிடைத்தது.

'சரி; இங்கே உன் மரியத்தின் பெயரை யாரும் எழுதிவைத் திருக்கவில்லை. போ.'

'எழுதி வைத்துக் கொள்ள வேண்டாம், சுவாமீ. எப்போதாவது அவள் கடிதம் வந்தால், அப்போது நான் இல்லாவிட்டால், அதனால் தங்களுக்குச் சிரமமோ குழப்பமோ உண்டாகாமலிருக்க வேண்டும் என்பதற்காகத் தான் கேட்டேன்.'

அவன் தன் முக்கால்வாசி வாழ்க்கையையும் வேட்டையாடுவதிலேயே கழித்தவன், மரியத்தின் பெயர் இவ்வளவு பெரிய பட்டணத்தில் அவளுடைய தகப்பனாகிய தன்னைத் தவிர வேறு யாருக்குத் தெரியப் போகிறது என்று யோசிக்க அவனுக்குத் திறமை ஏது?

போஸ்ட் மாஸ்டர் கொதிப் படைந்தார். 'உனக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா, என்ன? வெளியே போ' என்று கூவினார். 'உனக்குக் கடிதம் வந்தால், அதை யாரும் தின்றுவிட மாட்டார்கள்.' என்று மேலும் கூறினார்.

இவ்வாறு சொல்லி, அவர் துரிதமாக வெளியேறினார். அலி மெள்ள மெள்ள நகர்ந்தான், வெளியே போகும்

போது, ஒரு முறை தபால் ஆபீசைத் திரும்பிப் பார்த்தான். இன்று அவன் கண்களில், நிர்க்கதியான ஓர் அனுதையின் விழிபோல் கண்ணீர் தளும்பியது. அவனுடைய சிரத்தை என்னவோ இன்னமும் இருக்கத்தான் இருந்தது; ஆனுல், அவனது தைர்யத்துக்கு மட்டும் முடிவு ஏற்பட்டு விட்டது. ஹூம், மரியத்தின் கடிதம் இனிமேல் எங்கே வந்து சேரப் போகிறது?

ஒரு தபால் சிப்பந்தி அவனைப் பின் தொடர்வதுபோல் தோன்றியது. அலி அவனைத் திரும்பிப் பார்த்தான்.

'தம்பி!'

தபால் சிப்பந்தி திடுக்கிட்டான். ஆனுல், அவன் மிகவும் நல்லவன்.

'என்ன?'

'இதோ பார், இவை என்னிடம் இருக்கின்றன' என்று சொல்லிக்கொண்டே, அலி தன் மடியில் கைவிட்டு ஒரு பழைய டப்பாவை எடுத்து, அதிலிருந்து ஐந்து பவுன்களை வெளியே எடுத்தான். தபால் சிப்பந்திக்குத் தூக்கி வாரிப் போட்டது.

'மனதை அலட்டிக் கொள்ளாதே, தம்பி. இது உனக்கு ஒரு பெரிய காரியமல்ல. என்னைப் போன்றவன் இனி வாழ லாயக்கில்லை. எனக்கு நீ ஓர் உபகாரம் செய்வாயா?'

'என்ன?'

'மேலே என்ன தெரிகிறது? அலி சூன்யமான ஆகாய வெளியைத் தன் விரலால் சுட்டிக் காட்டினுன்.

'ஆகாயம்!'

'மேலே அல்லா இருக்கிருர்! அவர் முன்னிலையில் இந்த ஐந்து பவுன்களையும் நான் உனக்குக் கொடுக்கிறேன். என் மரியத்திடமிருந்து கடிதம் வந்ததும், கடிதத்தை எனக்கு அனுப்பிவிடு!'

தபால் சிப்பந்தி ஆச்சர்யத்தால் ஸ்தம்பித்து நின்றுன். 'எங்கே அனுப்ப வேண்டும்?' என்று அலியைக் கேட்டான்.

'என் சமாதிக்கு.'

'ஐயோ!'

'உண்மையே பேசுகிறேன். இன்று என் கடைசி நாள்...கடைசி நாள்! என் மரியம் வரவில்லை; அவள் கடிதமும் கிடைக்கவில்லை.'

அலியின் கண்களில் ஒரு விதமான போதை தோன்றியது. தபால் சிப்பந்தி மெதுவாக நகர்ந்தான். அவன் ஜேபியில் ஐந்து தங்கக் காசுகள் சல சலத்தன.

இதற்குப் பிறகு, அலி மறுபடியும் யார் கண்ணிலும் தென்படவே யில்லை. அவனைப்பற்றித் தெரிந்துகொள்ள எவரும் எண்ணமிடவு மில்லை. ஒரு நாள் போஸ்ட் மாஸ்டர் ஏதோ மிகவும் துக்கமா யிருந்தார். அவருடைய பெண் ஊரிலே காயலாவாயிருந்தாள். அதைப் பற்றித் தகவல் தெரிந்துகொள்ள, ஆவலும் கவலையும் அவர் உள்ளத்தைக் கவிந்திருந்தன.

தபால் வந்தது; கடிதங்கள் குவிய ஆரம்பித்தன. போஸ்ட் மாஸ்டர் ஏதோவொரு கடிதத்தைத் தம்முடையது என்று எண்ணி, அவசர அவசரமாகக் கையிலே எடுத்தார்.

'கோச்வான் அலி பாபா' என்று அதில் விலாசமிட்டு இருந்தது. மின்சாரம் தாக்கியதுபோல் கை நடுங்கி, கடிதத்தைப் போஸ்ட் மாஸ்டர் வீசி யெறிந்தார்.

சோக உணர்ச்சிகளின் ஆட்சி வசப்பட்ட போஸ்ட் மாஸ்டர், சிறிது நேரம் வரையில் தமது உத்தியோக தோரணையையே மறந்தார். மனித சுபாவத்துக் குரிய இயற்கையான குணங்கள் அவரிடம் வெளியாயின. 'இது அந்தக் கிழவனுடையதா யிருக்கலாம்' என்ற எண்ணம் திடீரென்று போஸ்ட் மாஸ்டருக்கு உதித்தது. 'ஒருவேளை அந்த யரியமே இந்தக் கடிதத்தை எழுதியிருக்கலாமோ!' என்று நினைத்தார்.

'லட்சுமிதாஸ்' என்று கூவி அழைத்தார் போஸ்ட் மாஸ்டர்.

கோச்வான் அலி பாபாவிடமிருந்து ஐந்து பவுன்கள் பெற்றுக் கொண்டானே ஒரு தபால் சிப்பந்தி, அவன் தான் லட்சுமிதாஸ்.

'என்ன, எஜமான்?'

'அந்தக் கோச்வான் அலி பாபா எங்கே?' என்று கேட்டார் போஸ்ட் மாஸ்டர்.

'தேடி அழைத்து வருகிறேன்.'

அன்று போஸ்ட் மாஸ்டரின் பெண்ணிடமிருந்து கடிதம் எதுவும் வர வில்லை. ஏதோ எண்ணமிட்டுக்கொண்டே, இரவு பூராவையும் கழித்தார். 'நாளைக் காலை மூன்று மணிக்கே நான் ஆபீஸில் போய் உட்கார்ந்து விடுவேன். அலி நான்கு மணிக்கு வருவான்; நான் அவனிடம் கடிதத்தை அன்போடு தருவேன்' என்று போஸ்ட் மாஸ்டர் தனக்குத்தானே கற்பனை செய்து கொண்டார்.

அலி பாபாவின் நிலையை இன்று போஸ்ட் மாஸ்டர் மிக நன்றாக உணர்ந்திருந்தார். இடையிடையே அன்று வரக்கூடிய கடிதங்களை நினைத்துக்கொண்டார். இப்படிப் பல சிந்தனைகளோடு அன்றைய இரவைக் கழித்தார். ஐந்து வருஷ காலமாக இம்மாதிரி மாளாத இரவுகளை அவன் கழித்திருப்பான் என்று இன்றுதான் அவருக்குத் தெரிந்தது. அவருடைய உள்ளத்தில் முதன் முதலாக அனுதாபம் நிறைந்து நெகிழ்ந்தது.

மறு நாள் ஆபீஸில் யாரோ ஒருவன் சரியாக ஐந்து மணிக்கு வந்து வாசல் கதவைத் தட்டினான். தபால்காரன் இது வரையில் வரவில்லை. அலி பாபா கதவைத் தட்டுவதுபோல் என்னவோ அவருக்குத் தோன்றிற்று. போஸ்ட் மாஸ்டர் எழுந்தார். ஒரு தந்தைக்கு இயற்கையாய் உண்டாகக் கூடிய மன வேதனையை அவர் அனுபவித்திருந்ததால், இன்று குதித்தெழுந்து கதவைத் திறந்தார்.

'அலி சகோதரரே, வாரும்; கடிதத்தைப் பெற்றுக் கொள்ளும்' என்றார். ஒரு கிழவன் ஊன்று கோலின் துணைகொண்டு குனிந்த வண்ணம் வாசலில் நின்றுகொண்டிருந்தான். அவன் கன்னங்களில் கடைசியாக வழிந்த கண்ணீர்த் துளிகள், இன்னும் ஈரம் உலராமல் இருந்தன. அவன் முகத்தில் விழுந்திருந்த சுருக்கங்களில், சீலகுணம் படர்ந்திருந்தது.

அவன் போஸ்ட் மாஸ்டரை நோக்கினான். போஸ்ட் மாஸ்டர் ஸ்தம்பித்துப் போனார். கிழவனின் கண்களில் அமானுஷ்ய ஒளி ஒன்று பிரதிபலித்தது.

'யாரது ஐயா? அலியா!' என்று கூவிக்கொண்டே, லட்சுமிதாஸ் ஓர் ஓரமாக வந்து நின்றான்.

போஸ்ட் மாஸ்டர் அவனைக் கவனியாமல் வாசலையே பார்த்துக் கொண்டிருந்தார். ஆனால், அங்கே யாரும் காட்சி அளிக்கவில்லை. ஆச்சர்யத்தோடு அவர் கண்களை அகல விழித்தார். வாசலில் யாரும் இல்லையே! இதென்ன? அவர் லட்சுமிதாஸை நோக்கினார்.

'ஆம், அலி பாபாவுக்குக் கடிதம் இருக்கிறது. யார், நீயா?'

'ஆம், நான்தான். அலி பாபா இறந்து விட்டான். என்றாலும், அவன் கடிதத்தை என்னிடம் கொடுங்கள்.'

'எப்போது இறந்தான்? நிஜமாகத்தானா, லட்மிதாஸ்?'

லட்சுமிதாஸைக் காணோம். ஆனால், ஒரு குரல் கேட்டது.

'நிஜமாகவே தான்; அவன் இறந்து மூன்று மாதங்கள் ஆகிவிட்டன.' இந்த வார்த்தைகளை எதிரே யிருந்து வந்துகொண்டிருந்த தபால்காரன் சொன்னான்.

போஸ்ட் மாஸ்டருக்குத் திக்பிரமை பிடித்து விட்டது. மரியத்தின் கடிதம் இன்னும் வாசற்படியிலேயே விழுந்து கிடந்தது. அலியின் உருவம் அவர் கண்ணுக்கு முன்னே ஆடாமல் அசையாமல் நின்றது. அலியை லட்சுமிதாஸ் கடைசி தினம் சந்தித்த வரலாற்றையும் தபால்காரன் சொன்னான். போஸ்ட் மாஸ்டரின் காதுகளில் கதவிடிக்கும் சத்தமும், அவர் பார்வையில் அலியின் உருவமும் தாண்டவமாடின. அவர் உள்ளம் பிரமித்துப் போயிற்று. 'நான் அலியைப் பார்த்தேனே! அது நினைவா அல்லது பிரமையா? அல்லது லட்சுமிதாஸா?' என்று தமக்குத் தாமே கேட்டுக் கொண்டார்.

மறுபடியும் அன்றாட நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. 'போலீஸ் கமிஷனர்', 'லைப்ரேரியன்' என்று, தபால் பிரிக்

கும் சிப்பந்தி கடிதங்களை வேகமாகப் படித்துக்கொண்டே வீசி யெறிந்தான்.

இன்று போஸ்ட் மாஸ்டர் ஒவ்வொரு கடிதத்தையும் உற்று உற்றுக் கவனித்தார். கவர் ஆறு காலணப் பெறு மான முள்ளது, கார்டு இரண்டு காலணப் பெறுமான முள்ளது என்ற எண்ணமெல்லாம் இன்று அவரது உள்ளத் திலிருந்து மறைந் தொழிந்தது. போஸ்ட் மாஸ்டர் கம்பீர மாக அமர்ந்திருந்தார்.

மனிதன் சுயநலத்தை விட்டுப் பரோபகாரம் செய்ய ஆரம்பித்தால், பாதி உலகம் அமைதியும் சாந்தியும் அடைந்து விடும்.

* * *

அன்று லட்சுமிதாஸும், போஸ்ட் மாஸ்டரும் மெல்ல மெல்ல அலியின் சமாதியை வந்தடைந்தார்கள். மரியத்தின் கடிதம், போஸ்ட் மாஸ்டர் வசம் இருந்தது. சமாதியின் மேல் கடிதத்தை வைத்து விட்டு, லட்சுமிதாஸும், போஸ்ட் மாஸ்டரும் திரும்பிச் சென்றூர்கள்.

‘லட்சுமிதாஸ்! இன்று நீர்தான் எல்லோருக்கும் முன் பாக ஆபீசுக்கு வந்திருந்தீரா?’

‘ஆம்.’

‘அலி பாபா’ என்று நீர்தான் சொன்னீரா?

‘ஆம்.’

‘ஆனல், அப்...அப்... எனக்குப் புரியவில்லே.’

‘என்ன?’

‘ஆம், சரி...ஒன்றுமில்லே—’

போஸ்ட் மாஸ்டர் சாதுரியமாக வார்த்தையை மாற்றி விட்டார். தபாலாபீசின் திண்ணையை வந்தடைந்தவுடன், போஸ்ட் மாஸ்டர் லட்சுமி தாஸைப் பிரிந்து, தமக்குத் தாமே ஏதோ எண்ணமிட்டுக் கொண்டே உள்ளே சென்றார். அன்று அலியின் தந்தை உள்ளத்தை, போஸ்ட் மாஸ்டர் அறிந்து கொள்ள முடியாது போனதற்காக அவரது இதயத்தில் வேதனை நிரம்பியிருந்தது. இன்று, இன்னும் தம்முடைய பெண்ணிட மிருந்து யாதொரு தகவலும் வராததால், இன்றைய இரவையும் வேதனையிலேயே கழிக்க நேர்ந்தது. ஆச்சரியம், சங்கை, பச்சாதாபம் என்ற மூன்றுவித தாபங்களினாலும் எரிக்கப்பட்டு, அவர் ஆபீசில் அமர்ந்தார். அவருக்கருகே வைத்திருந்த கணப்பிலிருந்து, கரித் தூளின் மெல்லிய ஜ்வாலை அவரை நோக்கி ஒளிவிட ஆரம்பித்தது.

# சத்தியம் தேடியவன் (ஹிந்தி)

சுதர்சன்

இது சென்ற யுகத்தில் நடந்த கதை. அப்போது கிரீஸ் தேசம் ஐசுவரியத்திலும் நாகரிகத்திலும் மேன்மையுற்றிருந்தது. உலகத்திலே காணக்கூடிய சகலவித ஐசுவரியமும் கிரீஸ் தேசத்திலே கொழித்திருந்தது.

அருங்கலைகளை ஒரு போதும் மறவாத புராதன ஆதன்ஸ் நகரம், இரவின் இருளிலே மூழ்கி யிருந்தது. எங்கே பார்த்தாலும் நிசப்தம் குடிகொண்டிருந்தது. கடைத் தெருக்கள் காலியா யிருந்தன; எந்த வீதியிலும் ஜன நடமாட்டம் கிடையாது. அந்த இருண்ட இரவிலே ஏதோ ஒரு காட்டில் புகைப் படலத்தினல் ஆக்கப்பட்ட ஒரு சத்திரத்தின் பிம்பம்போல், அழகிய ஆதன்ஸ் நகரம் காட்சி யளித்தது.

பட்டணமெங்கும் பூரண ஓய்வெடுத்துக் கொண்டிருந்தது. கலை மோகம் கொண்ட நகர மக்களெல்லாம் தங்கள் தங்கள் படுக்கையிலே பிரக்ஞையற்றுப் படுத்திருந்தார்கள். நாடகக் கொட்டகைகளிலிருந்து ஜனங்கள் வெளியேறி விட்டார்கள். போக போக்கியங்கள் அளிக்கும் வீடுகளின் விளக்குகள் அணைபட்டு விட்டன. வாயில் காப்போர்களின் கண்ணிமைகளும் கூட, தூக்கத்தின் வலியால் கெஞ்சி அயர்ந்தன. ஓர் இளைஞனின் கண்கள் மாத்திரம், தூக்கத்தால் பெறக்கூடிய அமைதியும் அமைதியின் காரணமாக உண்டாகும் தூக்கமும் கிடைக்காமல் வஞ்சிக்கப்பட்டு விட்டன.

அவன் தான் தேவகுலீசன் என்னும் மாணவன்! அவனுடைய ஆத்மா சத்தியத்தைக் காண நாட்டம் கொண்டது. அவன் ஒரு பெரும் பணக்காரனின் புதல்வன்.

எந்த விதமான சுகபோக ஆனந்தங்களை அவன் விரும்பினாலும், அத்தனையையும் வாங்கிவிடக்கூடிய அளவு ஐசுவரியம் அவனுக்கிருந்தது. அவன் அழகானவன். கிரீஸ் தேசத்து அதிசுந்தர கன்னிகைகள் பலரும் அவனைக் காதலித்துப் பித்தர்களாகி விட்டார்கள். அவன் ஓர் உயர்ந்த தத்துவ ஞானி. அவனது சாதாரண ஆராய்ச்சி கூட, வித்தியாலய ஆசிரியர்களின் அறிவுக்கு எட்ட மாட்டா; ஆனால், இதனோடு அவன் திருப்தியும் அமைதியும் அடைந்து விடவில்லை. அவன் சத்தியத்தைத் தேடுபவன்; சத்தியத்தைக் கண்டு கடைப் பிடிப்பதற்காக. தன்னைத்தானே அழித்துக் கொள்வதற்குக் கூட அவன் தயாரா யிருந்தான். அதற்காகத் தன் பொருள் அனைத்தையும் துறப்பதற்கும் சித்தமா யிருந்தான். இந்தப் பூவுலகின் நிலையில்லாத ஆனந்தங்களை, அவன் பொருட்படுத்தவேயில்லை. இளமையும் அழகும் ததும்பும் உயிரோவியங்களான பெண்களின் உருவங்கள் கூட, அவனை வசீகரிக்கவில்லை. எப்படியாவது ஒரு முறை சத்தியத்தை, அதன் உண்மையான வடிவத்திலே, நேருக்கு நேரே காண வேண்டும் என்று அவன் பேரவாக் கொண்டிருந்தான். சத்தியத்தை எவ்விதப் போர்வையுமின்றிப் பிறந்த மேனிக்குக் காண விரும்பினான். தன் மனோரதம் பூர்த்தியாவதற்காக, சகல சொத்துச் சுதந்தரங்களையும் தியாகம் செய்ய, அவன் தயாரா யிருந்தான்.

தேவகுலீசன் இரவு பகல் பாராமல் சதாகாலமும் படித்துக் கொண்டிருப்பான். படிப்பான், சிந்திப்பான்; சிந்திப்பான், படிப்பான். சிந்தனையும் தியானமும் என்னவோ அவனுடைய இதய தாகத்தைத் தணிக்கவில்லை. ஆனால், அவன் உடம்பு மட்டில் இளைத்துத் துரும்பாகி விட்டது.

## 2

வித்தியாலயத்தின் நந்தவனத்தில் ஓர் உயரமான திண்ணை உண்டு. ஞான ஒளித் தெய்வமான மினர்வா தேவதையின் சிலை அங்கே இருந்தது. அவள் சலவைக் கல் வஸ்திரம் அணிந்திருந்தாள். பனிக்கட்டி போல் சில்லென்றிருந்தன தேவியின் காலடிகள். தேவகுலீசன் அந்தக் காலடிகளிலே வந்து மணிக்கணக்காய் உட்கார்ந் திருப்பான். உலகத்தின் ரகஸ்யம் என்ன என்பதுபற்றி அப்போது அவன் சிந்தனை செய்துகொண்டிருப்பான். தேவகுலீசனின் மூளையில் ஏதோ கோளாறு ஏற்பட்டு விட்டது என்றே அவனுடைய நண்பர்கள் கருதினார்கள். அவனது இந்த நிலையைக் கண்டு அவர்கள் வெறுப்புற்றார்கள்.

அன்றிரவும் தேவியின் பாத கமலங்களி னருகே தான், தேவகுலீசன் உட்கார்ந்திருந்தான். கண்ணீர் பெருக, அவன் பிரார்த்தித்துக் கொண்டிருந்தான். "தாயே, தயை புரிவாய்! ஞானமும் கலையும் கரைகடந்த தேவியே, தயை புரிவாய்! என் மனத்தின் அபிலாஷையைப் பூர்த்தி செய்யமாட்டாயா? உன்னை நான் எத்தனையோ வருஷங் களாகப் பூசித்து வருகிறேன். அநேக இரவுகள், உன் பாதாரவிந்தங்களை என் கண்ணீரால் கழுவி யிருக்கிறேன். உன்னைத் தியானம் செய்வதிலேயே, அநேக நாட்களைக் கழித்திருக்கிறேன். என் பிரார்த்தனைக்குச் செவிசாய்த்து, அருள் புரியமாட்டாயா?"

தேவகுலீசன் இவ்வாறு பிரார்த்தனை செய்துவிட்டு எழுந்து நின்றான். தேவியின் பிரகாசமான முகத்தை நோக்கினான். ஆனால், அவள் அப்படியே மௌனமா யிருந்தாள்.

சந்திரன் ஆகாயத்தில் உதயமானான். குளிர்ச்சி நிறைந்த அவனது பொன்னொளியிலே, தேவியின் உருவம் இன்னும் பன்மடங்கு அழகாய்க் காணப்பட்டது.

தேவகுலீசன் மறுபடியும் சிலையின் காலடியில் அமர்ந்தான். குழந்தையைப்போல் அழுதுகொண்டு, மறு முறையும் பிரார்த்தனை செய்தான். அது சலவைக் கல்லால் செய்த வெறும் சிலை யென்று, அவன் அப்போது கருத வில்லை; இந்த உலகத்திலே உயிரோடு - வாழும் ஒரு பெண்ணாகவே, அதை அவன் கருதினான். பித்துப் பிடித்தவனைப் போல் கதறினான்: "இன்றிரவு முடிவாகி விட வேண்டும். ஞானமும் விவேகமும் நிறைந்த ராணியே! சத்தியத்தை அறியவேண்டும் என்ற ஆசைத் தீயை என இதயத்திலே நீதான் மூட்டி வைத்தாய்; நீயேதான் அந்தத் தீயைச் சத்தியம் என்ற குளிர் நீரால் சமனப்படுத்த முடியும். சத்தியம் எங்கே? நரை யில்லாத, அழிவில்லாத நிரந்தரமான சத்தியம் எங்கே? அந்தச் சத்தியத்துக்காகவே தான், புத்திமான்கள் சாஸ்திரார்த்தத்தைக் கற்பிக்கிறார் கள்; பண்டிதர்கள் சிந்தனை செய்கிறார்கள். அதையே யோகிகள் ஏகாந்தத்திலே நாடுகிறார்கள்; பக்தர்கள் கோவில்களிலே தேடுகிறார்கள். ஞானிகள் அதை அடை வதற்காகவே, எங்கெங்கும் ஓடித் திரிகிறார்கள். அந்த உயர்ந்த சத்தியத்தைக் காண, நான் ஆவலுள்ளவனாயிருக் கிறேன். இல்லாவிட்டால்-இந்தப் பிரகாசமான நிலவொளி யில் உன்மீது ஆணையாகச் சொல்லுகிறேன்—இந்த அர்த்த மற்ற என் வாழ்க்கையை, நான் இங்கேயே முடித்துக் கொள்ளப் போகிறேன். சத்தியமில்லாத வாழ்க்கையை, நான் அடியோடு வெறுக்கிறேன்."

இவ்வாறு சொல்லிவிட்டு, சிறு வாள் ஒன்றை, தேவ குலீசன், தனது உறையினின்றும் வெளியே உருவி யெடுத்

தான். தற்கொலை செய்துகொள்வதற்குத் தயாராகி விட்டான்.

திடீரென்று அந்த வெண்ணிறமான கற்சிலை உருவம், உயிர் கொண்டெழுந்தது. அது தேவ குலீசனிட மிருந்து வாளைப் பறித்து, நந்தவனத்தில் இருள் சூழ்ந்த ஒரு மூலையிலே எறிந்துவிட்டது. "தேவகுலீசா!" என்று கூப்பிட்டது.

தேவகுலீசன் நடு நடுங்கிக்கொண்டே, எழுந்து நின்றான். நம்பிக்கை, ஆனந்தம், சந்தேகம் இந்த மூன்றும் நிறைந்த பார்வையுடன், தேவியை நோக்கினான். இது உண்மைதானா? தேவியின் பிரசன்னம் உண்மைதானா?

ஆம், உண்மைதான். தேவியின் உதடு அசைந்தது. "தேவகுலீசா! தேவகுலீசா!!" என்று தேவி பலமுறை அழைத்தாள். ஒவ்வொரு முறையும், தேவகுலீசன் கவனமாகவே கேட்கலானான்.

"தேவகுலீசா! மரண மார்க்கம் இருள் மயமானது. நீயோ என்னைப் பூஜிப்பவன். நீ என் கண்முன்னேயே இந்த மார்க்கத்தில் செல்ல முடியாது. என் முன்னிலையிலேயே யாரும் தற்கொலை செய்து கொள்வதை, நான் பொறுத்துக்கொள்ள முடியாது. உனக்கு என்ன வேண்டும்? உன் மனத்தின் அபிலாஷை எதுவானாலும், அதைப் பூர்த்தி செய்ய, நான் காத்திருக்கிறேன்" என்று அருளினாள் தேவி.

தேவகுலீசனின் இதயம் வெற்றி ஆனந்தத்தினால் படபடத்தது. அவனது வாயிலிருந்து வார்த்தைகள் வெளிவரவில்லை. தேவியின் காலடியிலே அவன் வந்து அமர்ந்து, சிரத்தையுடன் சொல்லலானான்: "பவித்ரமான தேவியே. நான் சத்தியத்தை அதன் உண்மையான வடிவத்திலே

பார்க்க விரும்புகிறேன். நேருக்கு நேராக திரையின்றி, மறைவின்றி, சத்தியத்தைக் காண விரும்புகிறேன். வேறொன்றுமில்லை.''

"நீ சத்தியத்தை அறிய விரும்புகிறாயா?'' என்ற சப்தம் தேவியின் உதட்டிலிருந்து அசைந்து வந்தது: "நீயும் சத்தியம்தான். இந்த நந்தவனமும் சத்தியம்தான். நானும் சத்தியம்தான். கண்ணைத் திறந்து பார். சத்தியம் உலகத்திலே எங்குமே காணப்படுவதைக் காண்பாய்.''

**தேவகுலீசன்:** ஆனால், அவைகளிலே அது மூடித் திரையிடப் பெற்றிருக்கிறதே?

**தேவி:** "விவேகமாகிற கண்களைக் கொண்டு, திரைக்குப் பின்னாலுள்ள காட்சிகளைக் காணலாமே!''

**தேவகுலீசன்:** "பவித்ரமான தாயே! நான் சத்தியத்தை விவேகத்தினால் காண விரும்பவில்லை; இந்த என் கண்களைக் கொண்டு நேருக்கு நேரே பார்க்க விரும்புகிறேன்.''

வெண்ணிறக் கல்லால் ஆகிய தன் குளிர்ந்த கையை, தேவி அவன் தோள்மீது வைத்தாள்: "திரையிடாமல், நேருக்கு நேராகச் சத்தியத்தை இன்று வரையில் உலக மக்களில் யாருமே பார்த்ததில்லை. எந்தத் தேவதையும் இம்மாதிரியான வரத்தை யாருக்குமே அளித்ததில்லை. நீயோ உணவருந்தும் ஒரு புழு; உன் கண்களிலே, அந்தக் காட்சியை பார்க்கக்கூடிய சக்தி ஏது? என் யோசனையைக் கேள்: இந்த எண்ணத்தை விட்டுவிடு. இன்னும் ஏதாவது ஒரு வரத்தைக் கேள். இப்போது இங்கேயே அதைக் கொடுக்கிறேன்'' என்று சொன்னாள்.

**தேவகுலீசன்:** "கிரேக்க நாட்டின் அதிதேவதையே! திரையிடாத சத்தியத்தை, என் கண்களால் நேருக்கு

நேராய்க் காணவே நான் விரும்புகிறேன். வேறொன்றும் எனக்கு வேண்டாம்.''

**தேவி:** ''ஆனால், அதற்கு என்ன காணிக்கை செலுத்த வேண்டும் தெரியுமா ?''

**தேவகுலீசன்:** ''எதைக் கேட்டாலும் செலுத்தச் சித்தமாயிருக்கிறேன்.''

**தேவி:** ''பணம், பொருள், அழகு, புகழ் இவை அனைத்தும் உன்னிடமிருந்து பறித்துக் கொள்ளப்படும். சூரிய சந்திரர்களின் ஒளியைக்கூட, நீ காண முடியாமல் போகலாம். இந்த யாகத்தில் உன் வாழ்க்கையே ஒருகால் ஆகுதி யாகிவிடவும் கூடும். சத்தியத்தை நேருக்கு நேராக அதன் உண்மை வடிவிலே காண, இப்போதும் நீ விரும்பு கிறாயா ?''

**தேவகுலீசன்:** ''ஆம்; என்ன வந்தாலும் சரி, ஒப்புக் கொள்கிறேன்.''

தேவி தலைகுனிந்தாள்.

தேவகுலீசன் மேலும் சொன்னான்: ''ஆண்டவன் படைப்பிலே என்னிடம் உள்ள எதை வேண்டுமானாலும் தியாகம் செய்ய, நான் தயாரா யிருக்கிறேன்.''

தேவி தலைநிமிர்ந்து சிரித்துக்கொண்டே சொன்னாள்: ''நல்லது! நீ சத்தியத்தைக் காண்பாய்; உனக்குச் சத்தியம் காண்பிக்கப்படும். சத்தியத்தின் உண்மையான வடிவம் உனக்குப் புலப்படும். ஆனால், மறுபடியும் எச்சரிக்கிறேன்: நிதானித்துக்கொள். இன்று சத்தியத்தின் ஒரு திரை விலகியது, பாக்கி ஒரு வருஷத்துக்குப் பிறகு!''

மேற் கூறியபடி சொல்லிவிட்டு தேவி தனது வெண் ணிறமான போர்வையை அகற்றித் திண்ணையின் மேல்

வைத்தாள். தேவகுலீசனை இடுப்பிலே எடுத்துக்கொண்டாள். அவன் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, தேவியின் இரண்டு தோள்களிலும், கந்தர்வர்களைப் போல இரண்டு இறக்கைகள் வெளி வந்தன. தேவி இறக்கையை விரித்தாள். காற்றில் பறக்கலானாள். முதலில் நகரம், கோயிலின் கலசம், பர்வதம்; பிறகு, சந்திரன், நட்சத்திரங்கள், மேகமண்டலம் – இவையெல்லாம் பின்தங்கி விட்டன. தேவி தேவகுலீசனோடு ஆகாயத்தில் பறந்துகொண்டிருந்தாள். சிறிது நேரத்தில் அவள் அவனை மேகமலையொன்றில் நிறுத்தி வைத்தாள். தேவகுலீசன் பார்த்தான்: பூமிக்கும் அவனது பாதத்துக்கும் வெகுதூரம் இருந்தது. கீழே ஒரு சிறிய நட்சத்திரம் போல் பூமி மினுமினுத்துக் கொண்டிருந்தது. அவனுக்கு அருகாமையிலே புகைப் படலத்தால் ஆக்கப்பட்டு நிழலிலே மறைந்து கொண்டிருக்கும் ஒரு பொருளை, அவன் பார்த்தான். "இது என்ன?" என்று தேவியைக் கேட்டான்.

**தேவி:** "இது தான் சத்தியம். அது இங்கே மறைந்து வாழ்கிறது. இங்கேயிருந்துதான் உன் உலகத்துக்கும் மற்ற உலகங்கள் அனைத்துக்கும், தனது திவ்ய ஜோதியை அது பரப்புகிறது. இதன் மங்கிய பிரகாசத்திலே உட்கார்ந்துகொண்டு தான், புத்திசாலிகள் உலக ரகஸ்யமான விடுகதைகளை விடுவிக்கிறார்கள். அதிலே இருந்துகொண்டு தான், குருநாதன் தன் சிஷ்யர்களுக்கு வாழ்க்கைத் தத்துவங்களை உபதேசம் செய்கிறான். இதன் மங்கிய பிரகாசம் தான் படைப்பின் சூரியன். இந்தத் திவ்ய ஜோதியே, மானிட ஜாதியின் வாழ்க்கை லட்சியமாக விளங்குகிறது. இது அவ்வளவு பிரகாசமாயில்லையே என்று நீ நினைக்கலாம். ஆனால், தேவகுலீசா, உன் பட்டணத்துக்கருகே ஓர் ஆறு ஓடுகிறதல்லவா? அந்த ஆற்று மணலின் ஒவ்வோர் அணுவுமே ஒவ்வொரு சூரிய

ஞக மாறிப் பிரகாசித்தாலும், இந்தப் பர்வத பிம்பத்தின் பிரகாசத்துக்கு இணையாகாது. ஏனென்ருல், இது திரையிலே மறைந்திருக்கிறது. முன்னேறிச் செல், தேவ குலீசா! திரையை அகற்றுகிறேன்.''

தேவகுலீசனின் கண்ணுக்கு இன்ஞெரு திரை அகன்றது. உலகத்திலே ஒரு புதிய பிரகாசம் பரவுவது போன்ற ஓர் உணர்ச்சி, அவன் உள்ளத்திலே உண்டாயிற்று. சத்திய பிம்பம் முன்னேவிட இப்போது மிகவும் தெளிவாகவும் ஒளி பொருந்தியதாகவும், அவனுக்குத் தோன்றியது. தேவி மறுபடியும் தேவகுலீசனே ஆதன்ஸ் நகரத்துக்கே திரும்பக் கொண்டுவந்து சேர்த்தாள். சலவைக் கல் போர்வையைப் போர்த்திக்கொண்டு, அதே திண்ணேயின் மீது, தேவி மீண்டும் மௌனமாக அமர்ந்து கொண்டாள்.

இப்போது, தேவகுலீசன் பொன்னேயும் வெள்ளியையும் பொருட்படுத்தவில்லே. திரவியம் திரட்டுவதில் மக்கள் ஈடுபடுவதைக் கண்டு, தேவகுலீசன் ஆச்சரியமடைந்தான். வெள்ளியை ஒரு வெள்ளே மண்ணென்றும், பொன்னே ஒரு மஞ்சள் மண்ணென்றும் அவன் கருதினனே யொழிய அவைகளேச் சம்பாதிக்கச் சிறு முயற்சியும் செய்யவில்லே. அவன் படிப்பிலே மூழ்கி யிருந்தான்; இரவு பகலாகப் படித்துக்கொண்டிருந்தான். தேவகுலீசனுடைய சாதுக் குணத்தைக் கண்டு, அவனுடைய தந்தை, அவனுக்குத் தமது சொத்துக் கொஞ்சங்கூடக் கிடைக்காது என்று சொல்லிவிட்டார். ஆனல், தேவகுலீசன் அதைப்பற்றிக் கவலேயே கொள்ளவில்லே. ''தேவகுலீசா! இப்போது உனக்கு இளமைப் பருவம். நீ முதுமைப் பருவம் அடைவதற்கு முன்பே, ஏதாவது கொஞ்சம் பொருள் சேர்த்து வைத்துக்கொள். இல்லாவிட்டால், பின்னல் வருந்த நேரிடும்'' என்று நண்பர்கள் சொன்னர்கள். தேவ

குலீசன், அவர்களைப் பார்த்துச் சொன்னான்: "நீங்கள் சொல்வது ஒன்றும் எனக்குப் புரியவில்லையே."

ஆதன்ஸ் நகரத்தில் இருந்த ஒரு தனவந்தனின் மகளான கன்னி கழியாத பெண் ஒருத்தி, தேவகுலீசனை உள்ளன்போடு காதலித்து வந்தாள்; அவனுடைய கருவிழிகளின் மீது பெரிதும் மோகங் கொண்டாள். தேவகுலீசனின் நிலையை உணர்ந்து, அவள் பரிதாபம் கொண்டாள். தேவகுலீசனுக்கு உணவு தயாரித்துக் கொடுப்பாள். இல்லாவிட்டால், அவன் பசியால் வாடி மடிய வேண்டியது தான்.

இம்மாதிரியாக, முந்நூற்று அறுபத்தைந்து நாட்கள் பூர்த்தியாகிவிட்டன. ஆதன்ஸ் நகரம் மறுபடியும் இருளிலே மூழ்கி அமைதியாய் இருந்தது. தேவகுலீசன் மறுபடியும் தேவியை வணங்கினான். தேவி மறுபடியும் அவனை மேக மலைக்கு அழைத்துச் சென்றாள். தேவகுலீசனுக்குச் சத்தியத்தின் மற்றொரு திரையை விலக்கினாள். இம்முறை சத்தியத்தின் பிரகாசம் இன்னும் தெளிவாக விளங்கியது. தேவகுலீசன் அதைக் கண்டான். அவனுடைய ஊனக் கண்களுக்குப் பதிலாக, ஞானக் கண்கள் கிடைத்துவிட்டன. இந்த ஞானக் கண்களைக் கொண்டு, இளமைப் பருவத்துக்குப் பின்னே ஒளிந்து கிடக்கும் முதுமைப் பருவத்தின் ஒவ்வொரு ரேகையையும் கண்டு கொள்ள முடியும். அவ்வளவு தான்.

மறுபடியும், தேவகுலீசன், பகட்டும் அவித்தையும் நிறைந்த உலகத்துக்கே திரும்பி வந்து சேர்ந்தான். தேவி மறுபடியும் சலவைக் கல் சிலையாக மாறி, தன் இருப்பிடத்துக்கே வந்து சேர்ந்தாள்.

ஒரு நாள் தேவகுலீசனின் நண்பனொருவன் சொன்னான்: "தேவகுலீசா! இன்று கிரீஸ் தேசத்துக் கன்னிப் பெண்கள் அனைவரும் ஆதன்ஸ் நகரில் வந்து கூடியிருக்கிறார்கள். அவர்களிலே மற்ற எல்லாரையும் விடப் பேரழகியான ஒரு யுவதிக்கு, அழகுப் பரிசு வழங்கப் போகிறார்கள். அந்த வேடிக்கையைப் பார்க்க, நாங்கள் எல்லாரும் போகிறோம். நீயும் வருகிறாயா?"

அவனைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே, தேவகுலீசன் சொன்னான்: "சத்தியம் அங்கே இல்லையே!"

மற்றொரு நாள் ஆசிரியர் சொன்னார்: "இன்று கிரீஸ் தேசத்திலுள்ள அறிவாளிகள் அனைவரும் வித்யாலயத்தில் கூடியிருக்கிறார்கள். நீயும் வந்து, அவர்களுடன் கலந்து கொள்கிறாயா?"

தேவகுலீசன் பெருமூச்செறிந்து கொண்டே சொன்னான்: "சத்தியம் அங்கேயும் இல்லை."

மூன்றாம் நாள் மடாதிபதி வந்து சொன்னார்: இன்று சந்திர தேவியின் பெரிய கோவிலில் தேவதைகளுக்குப் பூஜை நடைபெறும். நீயும் வருகிறாயா?"

தேவகுலீசன் கொட்டாவி விட்டுக்கொண்டே சொன்னான்: "சத்தியத்தை அங்கேயும் காணமுடியாது."

தேவகுலீசன் தனது இளமைப் பருவத்திலேயே, அந்தப் பருவத்தின் சகல ஆசைகளையும் ஜயித்துவிட்டான். இன்று அவன் பூரணத்தூய்மை பெற்றுவிட்டான். ஆனால், அவன் ஆதன்ஸ் நகரத்தின் எந்தத் திருவிழாவிலும் கலந்து கொள்வதில்லை; எந்தச் சபையிலும் பிரசங்கம் செய்வதில்லை.

தேவகுலீசன் வருஷம் பூராவும் தனிமையிலே படித்துக் கொண்டிருந்தான். அடிக்கடி மேக மலையை யடைந்து, சத்தியத்தின் திரைகளை எல்லாம் ஒவ்வொன்றாய் விலக்கிக் கொண்டு வந்தான்.

இம்மாதிரி அநேக வருஷங்கள் கடந்தன. அவனது ஞானம் நாளுக்கு நாள் விருத்தி யாயிற்று. ஆனல், அவனுடைய கண்கள் உள்ளே புதைந்து விட்டன; முதுகு கூனி விட்டது; தலைமயிர் நரைத்து விட்டது. அவன் சத்தியத்தைக் காண்பதற்காக, தன் இளமைப் பருவத்தை முதுமைப் பருவத்துக்குக் காணிக்கையாக அளித்துவிட்டான். ஆனல், அவன் இதைப்பற்றிக் கவலைப் படவே யில்லை. ஏனென்ருல், அவன் இளமையிலேயே முதுமையின் தத்துவத்தைக் கண்டு கொண்டான்.

தேவகுலீசன் தனது சிறிய அறையையே சமாதி யாக்கிக்கொண்டு விட்டான் என்று, மற்றவர்கள் எண்ணினர்கள்.

## 5

கடைசியாக, அவன் ஆவலோடு எதிர்பார்த்த இரவு வந்து சேர்ந்தது. அந்த இரவிலே ஒவ்வொரு நிமிஷமும், தேவகுலீசனுக்கு ஒரு நூற்ருண்டுக்கு மேலாகத் தோன்றிற்று.

இன்று சத்தியத்தின் கடைசித் திரை விலகும். இன்று அவன் சத்தியத்தை நேருக்கு நேராகத் திரையில்லாமல் உண்மை வடிவிலே காண்பான். சத்தியத்தை அவ்விதமாக இன்று வரையில், அழியும் மானிடன் எவனும் கண்டதில்லை. இன்று அவனுடைய வாழ் நாளிலேயே மிகவும் முக்கியமான இச்சை பூர்த்தியாகிவிடும்.

நள்ளிரவிலே அவனை விவேகமும் ஞானமும் நிறைந்த தேவி, இடுப்பிலே கடைசி முறையாக எடுத்துக் கொண்டாள். மேகமலையிலேயே கொண்டுபோய் நிறுத்தினாள்.

தேவகுலீசன் என்னவோ தன்னையுமறியாமல் அதைரியமடைந்தவனாய், சத்தியத்தை நோக்கினான்.

**தேவி:** "தேவகுலீசா! இந்தப் பிரகாசம் எவ்வளவு துல்யமாயிருக்கிறது! எவ்வளவு ஜோதி மயமாயிருக்கிறது! இதைப் பார்! இன்று வரையில் நீ அநேகம் திரைகளை விலக்கிக்கொண்டாய். ஆனால், அவை சத்தியத்தின் திரைகள் அல்ல. அவை உன் புத்தியின் திரைகளே யாகும்! சத்தியத்துக்கு ஒரே ஒரு திரைதான் இருக்கிறது! முன்னேறிச் சென்று அந்தத் திரையை விலக்கு. உனக்கு இஷ்டமானால், இப்போதும் நீ திரும்பிச் சென்று விடலாம். ஏழு சமுத்திரங்களின் முத்துக்களையும் உலகத்துத் தங்கம் முழுவதையும் உனக்குக் கொடுக்க, நான் தயாரா யிருக்கிறேன். உன் தேகம் மறுபடியும் ஆரோக்கியத்தை அடையும். நாசமடைந்த உன் வாழ்க்கையை, நீ திரும்பப் பெறமுடியும். உன் தலை மயிரை மறுபடியும் கருமையாக்கி விடுகிறேன். தேவகுலீசா! இப்போதும் பரவா யில்லை. உன் சங்கல்பத்தை உதறித் தள்ளிவிடு; உலக பாக்கியங்களை யெல்லாம் அடையலாம்."

ஆனால், தேவியின் சொல்லுக்கு, வீரன் தேவகுலீசன் இணங்க வில்லை. அவனுடைய நெஞ்சு படபடத்தது; கால்கள் தள்ளாடின; கைகள் நடுங்கின. அவன் தலை சுழல ஆரம்பித்தது. ஆனால், அவன் மறுபடியும் முன்னேறிச் சென்றான். ஆத்ம பலத்தையும் தேக பலத்தையும் சேகரித்துக் கொண்டு, கையை அகல விரித்து, கடைசித் திரையையும், அவன் கிழித்து விட்டான்.

அட ஆண்டவனே! எங்கே பார்த்தாலும் இருள் பாவியிருந்தது; பயங்கரமாயிருந்தது. இதைப் போன்ற இருளைத் தேவகுலீசன் இதுவரையில் ஒரு முறை கூடப் பார்த்ததில்லை. அவன் உரக்கக் கத்தினான்: "தேவி! தாயே! எனக்கு ஒன்றுமே புலப்படவில்லையே. திரைக்குப் பின்னாலிருந்த **அது** எங்கே போய்விட்டது?"

"தேவகுலீசா! தேவகுலீசா!!"...தேவியின் மதுரமான குரல் கேட்டது.

தேவகுலீசன் இருளிலே தடுமாறிக்கொண்டே சொன்னான்: "தேவி! **அது** எங்கே? நான் எங்கே இருக்கிறேன்? நீ எங்கே இருக்கிறாய்?"

தேவி தன் கைகளை மெதுவாக அவனுடைய தோளின் மேல் வைத்து, பதில் சொன்னாள்: "சத்தியத்தின் உண்மை வடிவை நேருக்கு நேராகக் காணும் வலியின்றி, உன் கண்கள் அவிந்து போய்விட்டன. உலகத்திலே எந்தச் சக்தியும் இனி உன் கண்களைக் குணப்படுத்த முடியாது. இந்த எண்ணத்தை விட்டு விடு என்று நான் உன்னிடம் எத்தனையோ முறை சொன்னேன். நீ அதற்கு இணங்கவில்லை. மனிதன் சத்தியத்தை நேருக்கு நேராய்ப் பார்க்க விரும்பினால் உண்டாகக்கூடிய பலனை, நீ கண்டு கொண்டாய். சத்தியத்தைத் திரையின் வழியேதான்—மறைமுகமாகத்தான்—மனிதர்கள் காண முடியும். எப்போது சத்தியத்தின் கடைசியான திரை விலக்கப்படுகிறதோ, அப்போது மனிதன் ஒன்றையுமே காண மாட்டான்; காண முடியாது."

தேவகுலீசன் மேக மலையிலிருந்து தலை குப்புற விழுந்தான்; விம்மி யழுதான்.

அநேக ஆயிரம் வருஷங்கள் கழிந்துவிட்டன. ஆனால், சத்தியத்தை நாடிய தேவகுலீசனை, ஆதன்ஸ் நகர மக்கள் இன்றும் தேடிக்கொண்டிருக்கிறார்கள். இன்றும் அவனது அழுகைக் குரல் மட்டில் அன்று போலவே மேக மலையில் கேட்டுக்கொண்டிருக்கிறது.

DR. T. P. M. L... MADURAI KAMARAJ UNIVERSITY

# வியாபாரி (ஹிந்தி)

சுதர்சன்

குன்றுகள் சூழ்ந்த மலர் வனத்தை அடுத்தாற்போல் ஒரு கிராமம். வசந்த காலத் தென்றல் கிராமத்தைத் தழுவி, அதன் சிறு குடிசைகளின் மீதெல்லாம் நறுமணத்தைப் பரப்பிக்கொண்டிருந்தது. மலையடிவாரத்தின் குளிர்ந்த நீர் வீழ்ச்சி, கிராமத்தைத் தன் கைகளால் அன்புடன் அணைத்துக் கொள்வதுபோல் சிலுசிலுத்தது. அந்த ரமணீயமான பிரதேசத்தில் எப்போதும் ஓர் இனிமையான சங்கீதம் ஒலித்துக் கொண்டிருந்தது. பட்சிகள் ஓயாமல் இன்னிசை பொழிந்து கொண்டிருந்தன. மாதுளையின் சிவந்த பூக்கள் வீசிய நிழலின் மேல் அந்தி வெயிலின் செங்கிரணங்கள் படர்ந்து ஒருவித ஜொலிப்பை உண்டு பண்ணியது. ஷிரீம் அந்த மாதுளை மரத்தின் கீழேயுள்ள ஓர் அகன்ற பாறையின் மேல் உட்கார்ந்தவாறு, எதிரேயுள்ள ரோஜாச் சோலையைப் பார்த்துக் கொண்டிருந்தாள். வானம்பாடிகள் அங்குமிங்கும் பறந்து கொண்டும், ஆடிக்கொண்டும், வானத்திலே இனிய கீதம் வர்ஷித்துக் கொண்டிருந்தன.

ஷிரீம் திடீரென்று தன் சல்லாவை விலக்கினாள். இயற்கைத் தேவியே சந்தோஷமடைந்து சிறித்ததுபோல் தோன்றியது, ரோஜாக்களின் கூட்டத்தில் ஷிரீமின் முகம் கம்பீரமாய்ப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. மகரந்தப் பொடியைப் பூரணமாக உட்கொண்ட இரண்டு கரு வண்டுகள் அந்த ரோஜாவை விட்டு அப்படி இப்படிச் சிறிது கூட அசைய முடியாமல் சித்திரம்போல் இருந்தன. வானம்பாடிகள் புதர்களில் புகுந்து வெளி வரு

வதையும் நுழைவதையும், ஷிரீம் மனம் லயித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஷிரீமின் ஒருநிலைப்பட்ட கவனம், அவளுடைய தோழி ஜலேகாவின் வருகையால் குலைந்துவிட்டது: ஜலேகா தன் சல்லாவை விலக்கிக் கொண்டு சொன்னாள். "ஷிரீம், உன் அன்புக்குரிய பட்சி இப்போதெல்லாம் ஏன் இங்கே தென்படுவதில்லை, வருவது மில்லை?"

"கடுமையான குளிர் காலத்தில், அது தன் கூட்டத்தாருடன் சமவெளிப் பிரதேசத்துக்குச் சென்று விட்டது. வசந்த காலமும் வந்துவிட்டது. ஆனால், அது என்னவோ இன்னும் திரும்பி வரவில்லை" என்று சொல்லிப் பெருமூச்செறிந்தாள்.

"ஹிந்துஸ்தானத்தில் வெகு தூரம் வரை அவை சென்றுவிட்டன என்று கேள்விப்பட்டேன். என்ன, இது உண்மைதானா, ஷிரீம்?"

"ஆம், அவைகள் சுதந்தரமாய் வாழ்வதற்கு விரும்புகின்றன. இந்தக் கூட்டம் மிகவும் சுதந்தர ஆசையுள்ளது."

"அது சரி; உன் கருங் கூந்தல் நெற்றியிலே சுருண்டு என்ன வசீகரமாயிருக்கிறது! இந்த வசீகர வலையிலே நீ ஏன் உன் அன்புக்குரிய பட்சியைச் சிக்க வைக்கவில்லை?"

"என் வலை என்னவோ அதைப் பிடிப்பதற்குத் தயாராய்த்தான் விரித்துக் கிடக்கிறது. அது வந்து சிக்கினால் அல்லவா?"

"நல்லது, திரும்பி வரும். மனத்தை அலட்டிக் கொள்ளாதே; கவலைப்படாதே. நான் வருகிறேன்."

"ஷிரீம் தலை யசைத்தாள். ஜலேகா போய்விட்டாள்."

மலைப் பிரதேசத்திலே, மாலையிருள் மெல்ல மெல்ல விரிந்த தொரு போர்வை போல் சூழ்ந்தது. வரிசை வரிசையாகப் பட்சிகள் தங்கள் புதர்களை நோக்கிப் பறந்து செல்கின்றன. பறந்து செல்லும் பட்சிகளின் இறக்கைகளால் காற்றில் அலைகள் எழும்புகின்றன. ரோஜா தன் நறுமணத்தை ஒளித்து வைத்துக்கொண்டு பசுமையான இலைகளுக்குள்ளே பதுங்கிக் கிடக்க விரும்புகிறது. ஷிரீம் விழித்துக் கொண்டே இருந்தாள். என்ருலும், அவள் கண்ணிமைகள் மட்டில் மூடியே யிருந்தன. அவள் ஏதோ ஒரு கற்பனையிலே மூழ்கி யிருந்தாள்.

ஹிந்துஸ்தானத்தில் செல்வம் மிக்க ஒரு கிராமத்தின் தெருக்களில் ஓர் இளைஞன் தன் முதுகிலே பெரிய மூட்டை ஒன்றைச் சுமந்து சுற்றிக் கொண்டிருக்கிருன். உழைப்பின் சிரமத்தாலும் ஆகாரம் இல்லாததாலும், அவன் முகம் வாடி வதங்கி யிருந்தது. களைப்பு மேலிட்டு அவன் ஒரு வீட்டின் வாயிலை அடைந்தான். ஏதாவது கொஞ்சம் விற்பனை செய்து அன்றையப் போதைக் கழிக்க அவன் எண்ணினுன். அன்று வயிற்றைக் கழுவுவதற்குப் போதுமான சொற்பப் பொருளையேனும் அடைய அவன் தீவிரமாய் முயன்ருன். அவனது தீனக் குரல் அவனது கவலையைக் காட்டிற்று. "கடனுக்குக் கொடுத்தால் கொடு; இல்லாவிட்டால் மூட்டையை எடுத்துக்கொண்டு புறப்படு, தெரிந்ததா?" என்று வீட்டுக்காரன் சொல்கிருன்.

"கடன் கொடுக்க எனக்குச் சக்தியில்லை" என்று இளைஞன் சொன்னுன்.

"அப்படி யென்றால், எனக்கு ஒன்றும் வேண்டாம்."

ஷிரீம் இந்தக் கற்பனையிலிருந்து விழித்துக்கொண்டு, திடுக்கிட்டாள்.

வியாபாரி மூட்டையை சுமந்து கொண்டு, தன் கூட்டத்தாருடன் கைபர்க் கணவாயைக் கால் நடையாகக் கடக்க ஆரம்பித்தான்.

ஹிந்துஸ்தானில் உள்ள ஒவ்வொரு வீட்டுக்காரனிடத்திலும் ஏராளமான பொருளைக் கொண்டுபோய் வைத்துவிட வேண்டும்; தங்களுக்குத் தேவையில்லாவிட்டாலும், அவர்கள் அனைவரும் இந்த இளைஞனின் சாமானை வாங்கிக் கொண்டு இவனுடைய சுமையைக் குறைக்க வேண்டும் என்று ஷிரீம் எண்ணினாள். ஆனால், பேதை ஷிரீம் என்ன செய்ய முடியும்? அவளுடைய தந்தை கொடூரமான ஒரு மலைநாட்டுத் தலைவன் ஆவானே! அவள் தலை குனிந்து கொண்டாள். யோசிக்க ஆரம்பித்தாள்.

அந்திப் பொழுதின் ஆதிக்கம் ஆரம்பித்துவிட்டது. சந்தடி அடங்கி விட்டது; அமைதி குடிகொண்டது. ஷிரீம் எப்படிச் சுவாஸம் விடுவாளோ அதே போல், காற்று நின்று நின்று வீசுகிறது. அவள் அசைவற்று உட்கார்ந்திருந்தாள்.

வேலைக்காரி வந்து அவளை எழுப்பினாள்; "ராணி கூப்பிடுகிறார்கள்" என்று சொன்னாள்.

* * *

**மா**தங்கள் கடந்தன. ஷிரீம் ஒரு பணக்கார சர்தாரை மணந்துகொண்டாள். நீர் வீழ்ச்சியின் அருகே ஷிரீமின் நந்தவனம். வசந்தக் காற்றுச் செடிகளின் மீது மோதி, கோடிக்கணக்கான புஷ்பங்களை உதிர்த்துக்கொண் டிருக்

கிறது. தேன் ஆறுகப் பெருகுகிறது. வானம்பாடிகள் வசந்தத்தின் ஆற்றாமையால் சோக கீதம் பொழிகின்றன. ஷிரீம் எல்லாவற்றையும் பொறுமையாகச் சகித்துக் கொண்டாள். சர்தாரின் முகத்தில் உற்சாகம் நிரம்பி யிருந்தது. காலை நேரம் மகா ரம்யமாயிருந்தது.

ஒடுங்கிய தேகமும் உயர்ந்த தோற்றமும் உள்ள ஓர் இளைஞன் ஒரு பெரிய மூட்டையை முதுகில் சுமந்து கொண்டு எதிரே வந்து உட்கார்ந்தான். ஷிரீம் அவனைக் கண்ணெடுத்துப் பார்த்தாள். ஆனால், அவன் யாரையும் பார்க்கவில்லை. மூட்டையை அவிழ்த்துச் சாமானைப் பரப்பினான். சர்தார் தன் காதலிக்குப் பரிசளிப்பதற்காக ஒரு கண்ணாடிப் பேலாவும், சில காஷ்மீர் சாமான்களும் தேர்ந்தெடுத்தான்.

ஷிரீம் மௌனமா யிருந்தாள். அவளுடைய இதயக் கூட்டில் துக்கம் ஓலமிட்டுக்கொண்டிருந்தது. வியாபாரி யைச் சர்தார் விலை கேட்டான்.

"நான் காணிக்கை கொடுப்பது வழக்கமே தவிர, விலைக்கு விற்பதில்லை" என்று பதில் அளித்தான் வியா பாரி; "அயல் நாட்டுச் சரக்குகளையும், காஷ்மீரத்துச் சாமான்களையும் நான் பொறுக்கி எடுத்து வந்திருக் கிறேன். இவைகளுக்கு விலை மதிப்பே கிடையாது. இவைகளில் என் இதயம் பொதிந்திருக்கிறது. இவைகளை நான் விலைக்கு விற்கமாட்டேன்" என்று மேலும் சொன்னான்.

சர்தார் கோபத்தோடு கூறினான்: "அப்படியானால் எனக்கு ஒன்றும் வேண்டாம், எடுத்துக் கொண்டு போ; எழுந்திரு."

"எடுத்துக்கொண்டு போகிறேன். நான் மிகவும் களைத்து வந்திருக்கிறேன். கொஞ்சம் பொறுங்கள். கை

கால் அலம்பிக்கொண்டு வருகிறேன்.'' இவ்வாறு சொல்லிய இளைஞன், தன் கண்களில் நீர் தளும்பியதை மறைத்துக்கொண்டு எழுந்து சென்றான்.

அவன் கைகால் அலம்ப நீர்வீழ்ச்சிக்குச் சென்றிருப்பான் என்று சர்தார் எண்ணினான். ஆனால், வெகு நேரமாகியும் அவன் திரும்பி வரவில்லை. மனப்புண்ணையும், தாங்க முடியாத துக்கத்தையும் அடக்கிக்கொண்டு, ஷிரீம் ரோஜாச் சோலையை நோக்கித் திரும்பினாள். ஆனால், நீர் ததும்பிய அவள் கண்களுக்கு ஒன்றும் புலப்படவில்லை. சர்தார் அவள் முதுகைத் தன் கையால் வருடிக்கொடுத்துக் கொண்டே "என்ன பார்க்கிறாய்?'' என்று கேட்டான்.

"நான் வளர்த்த வானம்பாடி ஒன்று ஹிந்துஸ்தானை நோக்கிச் சென்றுவிட்டது. அது மறுபடியும் இன்று காலையில் தென்பட்டது. என் சமீபத்திலும் வந்தது. நான் அதைப் பிடிக்க முயற்சி செய்தேன். ஆனால், அது கற்பனைக் கெட்டாத ஒரு மலையை நோக்கிப் பறந்து சென்று விட்டது.'' ஷிரீமின் குரலில் நடுக்கம் கண்டது. இருந்த போதிலும், இந்த வார்த்தைகள் தட்டுத் தடுமாறி வெளி வந்துவிட்டன.

"புஷ்பச் சோலையிலா வானம்பாடியைத் தேடுவது? என்ன ஆச்சரியம்!'' என்று சர்தார் சிரித்துக்கொண்டே கேட்டான்.

வியாபாரி தன் சுமையை வைத்துவிட்டுச் சென்றான். ஆனால், திரும்பி வரவேயில்லை. ஷிரீம் அவனுடைய சுமையை என்னவோ இறக்கிவிட்டாள். ஆனால், அதற்குரிய விலையை மாத்திரம் கொடுக்க முடியவில்லை.

# கைதியின் கடிதம்

**ப. கி. விஜயராகவன்**

சிப்பாய்க் கலகம் என்கிற சுதந்தரப் புரட்சிக் காலத்தில் நிகழ்ந்த எத்தனையோ உருக்கமான சம்பவங்கள், சரித்திர திபத்தின் முன் வராமல் இருளிலே புதைந்துகிடக்கின்றன. அந்தக் காலத்தில், கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சியைக் கவிழ்க்க, பலர் பலவித நோக்கத்துடன் முன் வந்தார்கள் என்று சொல்லப்படுகிறது. அப்படிப்பட்டவர்களில் ஒருவர் ஜவாம் பக்த் என்பவர். இவர் ஔரங்கசீப்பின் பேரன். 'சிப்பாய்க் கலகம்' தோற்றது. இவரும் இவர் மனைவியும் ரங்கூனில் சிறைப்பட்டார்கள். இவர் மனைவி, ரங்கூனிலிருந்து, டில்லியிலுள்ள தன் தாய்க்கு ஓர் உருக்கமான கடிதம் எழுதியிருக்கிறாள். சர்வ பாக்கியங்களுடன் வாழ்ந்த ஒரு ராஜகுமாரி, சிறைக் கைதியாய் இருந்துகொண்டு எழுதும் கடிதம். கடிதத்திலே மற்றெல்லாவற்றையும் விட ஒரு முக்கியமான அம்சம் கவனிக்கத் தக்கது. இந்திய முஸ்லீம்கள் இந்தியர் அல்ல போலச் சிலர் எண்ணுகிறார்கள். இந்திய முஸ்லீம்களின் பாஷையும், பழக்க வழக்கங்களும் இந்திய மயமானவை. ஓர் இந்திய முஸ்லீம் ராஜகுமாரி, பர்மாவில் போய் வாழ்க்கையில், தாய்க்கு எழுதும் கடிதத்தில், இந்தியாவையே தாயகமாக மதித்து வெளியிடும் மனமுருக்கும் உணர்ச்சிகளை இதிலே காணலாம்:

**"ரங்கூன், பர்மா தேசம்,**
**கைதி டில்லி ராஜாவின் வீடு.**

"அன்புமிக்க தாய்க்கு வந்தனம். உன் பெண்ணுகிய நான் கரு நீர் பரந்த கடலுக்கு அப்பால் இருக்

கிறேன். என் ஊரான டில்லி இங்கே யிருந்து ஆயிரக் கணக்கான மைல் தூரத்தில் இருக்கிறது. நான் தாயை விட்டுப் பிரிந்திருக்கிறேன். நான் உயிர் உள்ள வரையில், என் தாய் வழிச் சுற்றத்தாரைச் சந்திக்க விரும்பவில்லை. சாயீம் சபீல் ஷா உன் கடிதத்தைக் கொண்டு வந்தார். அவர் என் மாமன் பகதூர் ஷாவிடம் பேசிக்கொண் டிருந்தார். அப்போது, நான் எனது சல்லா வழியாகப் பார்த்தேன். சாயீம் சபீல் ஷா விம்மி விம்மி அழுதுகொண்டிருந்தார். என் மாமனின் கண்களில் நீர் ததும்பியது. என் கணவரான ஜவாம் பக்திடம் பேசிக்கொண்டே, என்னிடம் வந்து கடிதத்தைக் கொடுத்தார். கடிதத்தைத் தந்தவுடன், அவர் அழ ஆரம்பித்து விட்டார். எனக்குப் பழைய நாட்கள் ஞாபகம் வந்தன. என் கலியாணம், அப்போதிருந்த குதூகலம், கலியாணத்தின்போது அணிந்த புஷ்ப ஆபரணம் இவைகளை யெல்லாம் சாயீம் சபீல் எனக்கு ஞாபகமூட்டி விட்டார். அப்போது நான் ஹிந்துஸ்தானத்து யுவராஜாவின் ராணியாய் இருந்தேன். சாயீம் சபீல் ஷா ஏழு வாயில்களையும் வாயில் காப்போன்களையும் கடந்துதான், என்னை வந்து பார்க்க முடியும். ஆனால், இன்றோ நான் நாடு கடத்தப்பட்ட ஒரு கைதி: அதிலும் ஒரு கைதியின் மனைவி; கைதிகளான மாமன் மாமிகள் மருமகள்.

“இப்போது இங்கே அந்த சிவப்புக் கோட்டையும் கிடையாது; ஏழு வாயில்களும் இல்லை; வாயில் காப்போனும் இல்லை. மரத்தால் கட்டிய ஒரு வீடுதான் உண்டு. அதுவும் மழை காலத்தில் ஒழுக்கெடுக்கும். நாலே நாலு அறைகள். இந்த அறைகளைத் தவிர, வேறே இடம் கிடையாது. என் மாமனுக்கும் மாமி மகாராணி ஜீனத் மகலுக்கும் படுப்பதற்கு ஒரே அறைதான். எனக்கும் என் கணவருக்கும் மற்றோர் அறை. மூன்றாவது அறையில் வேலைக்

காரர்கள். சாப்பிடுவதற்கும் சந்திப்பதற்கும் வேறோர் அறை. எனக்கு இந்தத் தேசத்தின் சீதோஷ்ண நிலை பிடிக்கவில்லை. இங்கே மழை மிக அதிகம்; கொசுக்களோ ஏராளம். வீடு பழைய வீடு; இடிந்துபோன வீடு. அடிக்கடி ஜுரம் வந்து விடுகிறது. மாமனாரும் மகாராணியும் எப்போதும் உடல் நிலை குன்றி யிருக்கிறார்கள். கணவர் ஒருவர்தான் கடவுளின் கிருபையால் சௌக்கியமாய் இருக்கிறார். டில்லி நகரத்தின் சீரழிந்த நிலையை, உன் கடிதத்தில் வர்ணித்திருக்கிறாய். அதை எங்கள் கண்களாலே பார்த்து விட்டுத்தான் இங்கே வந்திருக்கிறோம்.

பெரிய சகோதரனின் தூக்குத் தண்டனையை உன் கடிதத்தின் மூலம் தெரிந்துகொண்டேன். கலகம் நடந்த போது அவர் தான் காசி சென்று விட்டாரே! அவருக்கு எந்தக் குற்றத்துக்காகத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது என்று உன் கடிதத்தில் எழுதவில்லை. அதைச் சாயீம் சாஹெபிடம் கேட்டேன். ஹஜரத் சையத் ஹுசேன் அஸ்கரிக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது என்றும், பெரிய சகோதரர் அஸ்கரியுடன் சேர்ந்து சூழ்ச்சி செய்து விட்டு அதை மறைப்பதற்காகவே காசிக்குச் சென்று விட்டார் என்று யாரோ சொன்னதாகவும் சாயீம் சாஹெப் மூலம் தெரிந்து கொண்டேன். பெரிய சகோதரரின் நிலைமை என்ன பரிதாபம்! கொஞ்சம்கூடத் தயை தாட்சண்ய மின்றி அவருக்குத் தூக்குத் தண்டனை கொடுக்கப்பட்டதாம். அவரைத் தூக்கில் போடும்போது நீயும் இருந்தாயாம். அதைக் கேட்டவுடன் எனக்குத் துக்க மேலீட்டால் மூர்ச்சை உண்டாகிவிட்டது. நாங்கள் டில்லியிலிருந்து நாடு கடத்தப் பட்டபோதுகூட, பெரிய சகோதரர் காசியிலிருந்து வரவில்லையே!

“ அவருடைய பெண் குழந்தை கண்ணீர்விட்டுக் கதறுவதை, சாயீம் சாஹெப் சொல்லக் கேட்டு, எனக்குத்

தாங்க முடியாத துக்கம் உண்டாகிவிட்டது. சிறுமியின் வயது நாலு தான். தந்தை எங்கே சென்றுர் என்பது அதற்கு எப்படித் தெரியும்? பெரிய சகோதரரின் பிரேதம் வீட்டுக்குக் கொண்டுவரப் பட்டதாம். அப்போது அந்தச் சிறுமி 'அப்பா நம்முடன் கோபமா யிருக்கிருர்; பேச மாட்டேன் என்கிருர்; கண்ணைமூடிக்கொண்டு படுத்துக் கொண்டிருக்கிருர்' என்றதாமே! இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் என் நெஞ்சு பகீர் என்றது. பெரிய சகோதரர் தூக்கில் மடிந்ததைக் கேட்டதிலிருந்து, சபீதாவின் ஞாபகம் எனக்கு அடிக்கடி வருகிறது. அவளைப் பார்த்தால், என் மனதுக்குக் கொஞ்சம் ஆறுதல் உண்டாகும். ஆனுல், நான் எங்கே யிருக்கிறேன்; அவள் எங்கே இருக்கிருள்! என் தாய் தகப்பன் எங்கே இருக்கிருர்கள்; டில்லி எங்கே இருக்கிறது! டில்லிக்கு வர இப்போது துளிக் கூட ஆசை கிடையாது! நம் வம்சத்துக்கே கெட்ட காலம் வந்து சூழ்ந்து விட்டது.

"மகாராஜா பாபருக்கு உண்டான கஷ்டத்தைவிட அதிகமான கஷ்டத்தை இப்போது நாம் அனுபவிக்கிருேம். ஆனுல், பாபர் நம்பிக்கையை இழக்கவில்லை; நாமோ அதையும் இழந்து விட்டோம். உலகத்தின் கதவுகள் பாபரின் வீரத்துக்கு எதிரே திறந்து விட்டன. அவருக்கு அவ்வளவு செல்வாக்கு இருந்தது. அவர் விரும்பியபோதெல்லாம் ஆயிரக் கணக்கிலும் லட்சக் கணக்கிலும் வீரர்கள் அவர் சார்பாக யுத்தம் செய்தார்கள். ஆகையால், பாபரின் கஷ்டங்கள் நிவர்த்தி ஆயின. ஆனுல், நம் நிலைமை வேறு. இந்தப் பட்டணத்தில் உள்ளவர்களில் ஒருவர்கூட எங்கள் தரப்பில் அனுதாபம் காட்டுவதாகத் தெரியவில்லை. உலகத்திலே எப்போது அனுதாபம் உண்டாகுமென்றுல், அனுதாபம் காட்டுவோருக்கு ஏதாவது பலன் கிடைப்பதாயிருந்தால் தான். எங்களிடம் அனுதாபம் காட்டுவோருக்கு

என்ன கிடைக்கும்? எங்கள் செல்வாக்கு முடிந்து விட்டது; எங்கள் அதிர்ஷ்ட விளக்கு மங்கிவிட்டது. எங்களை ஆதரித்தவர்களெல்லாம் இறந்து பட்டார்கள். இப்போது யாராவது எங்களை ஆதரிக்க விரும்பினாலோ எங்களுக்கு உதவி செய்தாலோ, தூக்குத் தண்டனையைத் தவிர வேறொன்றையும் அவர்கள் எதிர்பார்க்க முடியாது.

"இமாம் ஹுஸேனின் கொலைகாரர்களுக்கு யஜீதின் தர்பாரிலிருந்து சொல்பக் கூலிதான் கிடைத்துவந்தது. ஒவ்வொருவனுக்கும் ஒன்றரைச் சேர் பார்லி கொடுத்தார்கள். கொலைகாரர்கள் கேவலம் ஒன்றரைச் சேர் பார்லிக்காக, ரசூலில்லாவின் பெண் வயிற்றுப் பேரனைக் கொலை செய்து விட்டார்கள்! அரச சேனையில் உள்ள ஒவ்வொரு சிப்பாய்க்கும் ஒன்றரைச் சேர் பார்லி கொடுக்க ஹுஸேனுல் முடிந்திருந்தால், அத்தனை பேரும் ஹுஸேனின் பக்கம் சேர்ந்திருப்பார்கள்! எங்கள் நிலைமையும் ஹுஸேனின் நிலைமையைப் போன்றது தான். இவ்வுலகமே ஆசை நிரம்பியது; ஆசையால் உருவானது!

"இந்த நாட்டின் பாஷை வேறு; மதம் வேறு; இருக்கை, உணவு எல்லாம் நம்மிலிருந்து வேறுபட்டவை. நாங்கள் யாரென்று இந்த ஜனங்களுக்குத் தெரியாது. எங்களை எதற்காகக் கைது செய்து வைத்திருக்கிறார்கள் என்பதும் அவர்களுக்குத் தெரியாது. நாங்கள் கைதிகளல்ல, சுதந்தரமாயுமில்லை; உயிரோடில்லை, நடைப் பிணங்களும் அல்ல. நம் வீட்டுக்கு, நம் பட்டணத்துக்கு, நம் தேசத்துக்கு நாங்கள் வர முடியாது; ஆகையால், நாங்கள் கைதிகள். இரும்புச் சங்கிலி கழுத்திலும் கால்களிலும் பூட்டப்படவில்லை; ஆகையால், நாங்கள் சுதந்தரமாயிருக்கிறோம். நண்பர்களிடமிருந்தும் சுற்றத்தாரிடமிருந்தும் பிரிக்கப்பட்டிருக்கிறோம்; ஆகையால்,

நாங்கள் நடைப் பிணங்கள். சாயிதா சுல்தானுவை மடியில் வைத்து மார்போடணைத்து, உச்சி முகந்து, இவை யெல்லாம் உன் அத்தையின் அன்பு, என்று சொல்லு. அப்பாவை மறந்துவிடு; எங்களை அறவே மறந்துவிடு. நீ அவரையும் சந்திக்க முடியாது; எங்களையும் சந்திக்க முடியாது. அவர் சமாதியில் இருக்கிறார்; நாங்களும் சமாதியில் தான் இருக்கிறோம். அவருடைய சமாதி தாய் நாட்டில் இருக்கிறது; ஆனால், எங்கள் சமாதியோ பர தேசத்தில் இருக்கிறது, நாங்கள் உயிருள்ள போதே சமாதி யில் இருக்கிறோம்; இறந்த பிறகும், சமாதியில் தான் உறங்கப் போகிறோம். தாயே நமஸ்காரம். பிள்ளைப் பேறில்லா அபாக்கியவதியான,

—உன் மகள்"

DR. T. P. M. LIBRARY. MADURAI KAMARAJ UNIVERSITY.

THE MADRAS RIPON PRESS.
Ramachandrapuram
Pudukkottai State